முரசொலி

ஆசிரியர்: மு. கருணாநிதி

வார இதழ்

முரசு 4 | 14—2—58 வெள்ளி | ஒலி 40

கற்பனை உரையாடல்

நடுவர்: வரலாற்று அன்னை

போட்டியில் கலந்து கொள்வோர்: தி. மு. க., காங்கிரஸ்

இசைப் போட்டிக்கான பாடல்கள்: பாரதியார் பாடல்கள் மட்டும்!

[பாரதியார் பாடல்களைக் கொண்ட இசைப் போட்டி— தி. மு. க. கருத்துகளையும், காங்கிரஸ் கருத்துக்களையும் அன்றே பாடியுள்ள பாரதியாருக்கு இசை மன்றத்தின் சார்பில் நன்றி!]

வரலாற்று அன்னை: இந்தப் போட்டியிலே பாடல்களுக்கும் இசைக்கும் நிறைய மதிப்பெண்கள் கிடையாது; பாட்டின் கருத்துக்குப், யாருடைய பாட்டிலே உண்மையும் நேர்மையும் எதிரொலிக்கிறதோ அவர்கள்தான் பரிசு பெறுவார்கள். கூறப்போனால், இந்தப் பாட்டுப் போட்டியின் நோக்கம் தி. மு. க.—காங்கிரஸ் இரண்டு இயக்கங்களின் உள்ளப் போக்கை நாட்டிற்கு உணர்த்துவதுதான்! முதலில் தி. மு. க. பாடலாம்!

தி. மு. க. தொண்டர்:

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!
இன்றெமை வருத்தும் இன்னல்கள் மாய்க!
நன்மை வந்தெய்துக! தீதெலாம் நலிக!
அறம் வளர்ந்திடுக!

காங்கிரஸ் தொண்டர்:

வாழிய பாரத மணித் திருநாடு!
ஆரிய நாட்டினர் ஆண்மையோ டியற்றும்
சீர்ய முயறசிகள் சிறந்து மிக்கோங்குக!
நந்தேயத்தினர் நாடோறும் உயர்க!
வந்தே மாதரம்! வந்தே மாதரம்!

தி. மு. க. தொண்டர்:

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!

காங்கிரஸ் தொண்டர்:

வாழிய நிரந்தரம் வாழ்க இந்திமொழி
வாழிய வாழியவே!

நடுவர்: பாரதியார் பாடலைத் திருத்துதல் தவறு.

தி. மு. க. தொண்டர்:

நீலத்திரைகட லோரத்திலே—நின்று
நித்தம் தவஞ்செய் குமரி எல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே—புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு!

சிங்களம் புட்பகம் சாவக—மாதிய
தீவு பலவினுஞ் சென்றேறி—அங்கு
தங்கள் புலிக்கொடி மீன்கொடியும் நின்று
சால் புறக் கண்டவர் தாய்நாடு

விண்ணை யிடிக்கும் தலையிமயம்—எனும்
வெற்பை யடிக்கும் திறனுடையார்—சமர்
பண்ணிக் கலிங்கத் திருள்கெடுத்தார்—தமிழ்ப்
பார்த்திவர் நின்ற தமிழ்நாடு

சீன மிசிரம் யவனரகம்—இன்னும்
தேசம் பலவும் புகழ்வீசிக்—கலை
ஞானம் படைத்தொழில் வாணிபமும் மிக
நன்று வளர்த்த தமிழ்நாடு!

காங்கிரஸ் தொண்டர்:

பாரத சமுதாயம் வாழ்கவே வாழ்க! வாழ்க!
பாரத சமதாயம் வாழ்கவே! ஜய ஜய ஜய!
எல்லோரும் இந்திய மக்கள்!

தி. மு. க. தொண்டர்:

தனி யொருவனுக் குணவில்லையெனில் இந்த
ஜகத்தினை அழித்திடுவோம்!
மனிதருணவை மனிதர் பறிக்கும்
வழக்கம் இனியுண்டோ?
எல்லோரும் ஓர்நிறை எல்லோரும் ஓர் விலை
எல்லோரும் இந்நாட்டு மன்னர்

காங்கிரஸ் தொண்டர்:

நெஞ்சு பொறுக்குதில்லையே—இந்த
நிலைகெட்ட மனிதரை நினைத்து விட்டால்!
கொஞ்சமோ பிரிவினைகள்?......

தி. மு. க. தொண்டர்:

சொந்த நாட்டிற் பரர்க்கடிமை செய்தே
துஞ்சிடோம்—இனி அஞ்சிடோம்!
எந்த நாட்டினும் இந்த அநீதிகள்
ஏற்குமோ? தெய்வம்—பார்க்குமோ?
பொழுதெலாம் எங்கள் செல்வங் கொள்ளை கொண்டு
போகவோ? நாங்கள்—சாகவோ?
அழுது கொண்டிருப்பமோ? ஆண் பிள்ளைகள்
...ல்லமோ? உயிர்—வெல்லமோ?

காங்கிரஸ் தொண்டர்:

பாரதத்திடை அன்பு செலுத்துதல்
பாபமோ மனஸ்—தாபமோ?

தி. மு. க. தொண்டர்:

கூறும் எங்கள் மிடிமையைத் தீர்ப்பது
குற்றமோ?—இதில்—செற்றமோ?

காங்கிரஸ் தொண்டர்:

ஒற்றுமை வழியொன்றே வழியென்பது
ஓர்ந்திட்டோம்; நன்கு—தேர்ந்திட்டோம்!

தி. மு. க. தொண்டர்:

மற்றும் நீங்கள் செய்யுங் கொடுமைக் கெலாம்
மலைவுறோம்; சித்தம்—கலைவுறோம்!

காங்கிரஸ் தொண்டர்:

சிறையிலே அடைப்பேன்! கொடுமை—கிடுமை, நாட்டுப் பிரிவினை என்றெல்லாம் இங்கே பேசாதே! (ஆத்திரத்துடன் பேசுகிறார்—ஒரே சிரிப்பு!)

நடுவர்: இது இசைப் போட்டி. இங்கே பேச்சுக்கு இடமில்லை!

இசைப் போட்டி

தி. மு. க. தொண்டர்:

ஆகாவென் றெழுந்ததுபார் யுகப்புரட்சி
கொடுங்கோலன் அலறி வீழ்ந்தான்!
வாகான தோள்புடைத்தார் வானமரர்;
பேய்களெல்லாம் வருந்திக் கண்ணீர்
போகாமற் கண்புகைந்து மடிந்தனவாம்;
வையகத்தீர்; புதுமை காணீர்!

இரணியன்போல ரசாண்டான் கொடுங்கோலன்
ஜாரெனும் பேரிசைந்த பாவி
சரணின்றித் தவித்திட்டார் நல்லோரும்
சான்றோரும்; தருமந் தன்னைத்
திரணமெனக் கருதிவிட்டான் ஜார் மூடன்
பொய் சூது தீமையெல்லாம்
அரணியத்திற பாம்புகள்போல் மலிந்து வளர்ந்
தோங்கினவே அந்த நாட்டில்

உழுது விதைத் தறுப்பாருக் குணவில்லை;
பிணிகள் பலவுண்டு; பொய்யைத்
தொழுதடிமை செய்வார்க்குச் செல்வங்க
ளுண்டு; உண்மைசொல் வார்க்கெல்லாம்
எழுதரிய பெருங் கொடுமைச் சிறையுண்டு
தூக்குண்டே இறப்பதுண்டு
முழுதுமொரு பேய்வனமாஞ் சிவேரியிலே
ஆவிகெட முடிவதுண்டு.

இம்மென்றால் சிறைவாசம்; ஏனென்றால்
வனவாசம்; இவ்வாறங்கே
செம்மையெலாம் பாழாகிக் கொடுமையே
அறமாகித் தீர்ந்த போதில்...

இமயமலை வீழ்ந்ததுபோல் வீழ்ந்திட்டான்
ஜாரரசன்; இவனைச் சூழ்ந்து
சமயமுள படிக்கெல்லாம் பொய்கூறி
அறங்கொன்று சதிகள் செய்த
சுமடர் சடசட வென்று சரிந்திட்டார்,
புயற்காற்றுச் சூறை தன்னில்
திமுதிமென மரம் விழுந்த காடெல்லாம்
விறகான செய்திபோலே!........

[பலத்த கைதட்டல்-ஆரவாரம்]

[காங்கிரஸ் இசைப் போட்டியிலே தோற்று விடுமோவென அஞ்சி, காமராசர் 'நாகராசர்' உடை உடுத்தி மேடை மீதேறிப் பாடுகிறார்.]

காமராசர்: [தன் கையிலே உள்ள சூலாயுதத்தை ஆட்டிக் கொண்டே, அங்குமிங்கும் ஆத்திரத்துடன் நடந்து கொண்டே] ஏ, தி. மு. க. வே!......

நாட்டிலெங்கும் சுதந்திர வாஞ்சையை
நாட்டினாய்; கனல்—மூட்டினாய்;
வாட்டியுன்னை மடக்கிச் சிறையினுள்ளே
மாட்டுவேன்; வலி—காட்டுவேன்!
கோழைப்பட்ட ஜனங்களுக் குண்மைகள்
கூறினாய்; சட்டம்—மீறினாய்
ஏழைப்பட்டிங்கு இறத்தல் இழிவென்றே
ஏசினாய்; வீரம்—பேசினாய்
அடிமைப் பேடிகள் தம்மை மனிதர்கள்
ஆக்கினாய்; புன்மை—போக்கினாய்;
மிடிமை போதும் நமக்கென் றிருந்தோரை
மீட்டினாய்: ஆசை—ஊட்டினாய்
எங்கும் இந்த சுயராஜ்ய விருப்பத்தை
ஏவினாய்; விதை—தூவினாய்
சிங்கம் செய்யும் தொழிலைச் சிறுமுயல்
செய்யவோ? நீங்கள்—உய்யவோ?
சுட்டு வீழ்த்தியே புத்தி வருத்திடச்
சொல்லுவேன்; குத்திக்-கொல்லுவேன்!

[சூலாயுதத்தை தி. மு. க. தொண்டரின் நெஞ்செதிரே நீட்டுகிறார்.]

தி. மு. க. தொண்டர்:

சதையைத் துண்டு துண்டாக்கினும் என்னெண்ணம்
சாயுமோ? ஜீவன்—ஓயுமோ?

காமராஜர்: (கோபத்தால் முகம் சிவக்க)

தொண்டு செய்யும் அடிமை!—உனக்குச்
சுதந்திர நினைவோடா?
பண்டு கண்ட துண்டோ?—அதற்குப்
பாத்திரமாவாயோ?
கப்பலேறு வாயோ?—அடிமை
கடலைத்தாண்டு வாயோ?
குப்பை விரும்பும் நாய்க்கே—அடிமை
கொற்றத் தவிசுமுண்டோ?
நாடு காப்பதற்கே—உனக்கு
ஞானம் சிறிது முண்டோ?
வீடுகாக்கப் போடா!—அடிமை
வேலை செய்யப் போடா!

தி. மு. க. தொண்டர்:

விண்ணிலிரவிதனை விற்றுவிட்டெவரும் போய்
மின்மினி கொள்வாரோ?
கண்ணினும் இனிய சுதந்திரம் போனபின்
கைகட்டிப் பிழைப்பாரோ?
மண்ணில் இன்பங்களை விரும்பிச் சுதந்திரத்தின்
மாண்பினை யிழப்பரோ?
கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினால்
கைகொட்டிச் சிரியாரோ?
"இன்னல் வந்துற்றிடும் போததற்கஞ் சோம்!
ஏழையராகி இனி மண்ணில் துஞ்சோம்!"
இதந்தரு மனையின் நீங்கி
இடர்மிகு சிறைப்பட்டாலும்
பதந்திரு இரண்டும் மாறிப்
பழிமிகுத் திழிவுற்றாலும்
விதந்தரு கோடி இன்னல்
விளைந்தெனை அழித்திட்டாலும்
சுதந்திரதேவி! நின்னைத்
தொழுதிடல் மறக்கிலேனே!......"
விடுதலை! விடுதலை! விடுதலை!
பறையருக்கும் இங்கு தீயர்
புலையருக்கும் விடுதலை!
பரவரோடு குறவருக்கும்
மறவருக்கும விடுதலை!
விடுதலை! விடுதலை! விடுதலை!.........

[பலத்த ஆரவாரம்........" தி. மு. க. வாழ்க!" என்ற வாழ்த்தொலிகள் எழும்புகின்றன.]

நடுவர்:

இருவர் உள்ளத்திற்கும் பிடித்த பாடல்களை இங்கே பாடினார்கள்! எதிர்பாராத வகையில் முதன் மந்திரிகூடக் கலந்து கொண்டார்! இவர்கள் தமக்காகத் தேர்ந்தெடுத்திருந்த பாரதியார் பாடல்களிலிருந்து இவர்களின் உள்ளத்தின்

[தொடர்ச்சி பக்கம்—10]

வெள்ளி 14-2-58 சென்னை

கைத்தறியின் அவலம்!

கைத்தறியா?

ஆலையா?

—செயற்கைச் சந்திரன்கள் பூவுலகை வட்டமிடும் இந்த நேரத்தில் இந்திய உபகண்டத்திலே இப்படி ஒரு பிரச்சினை தோன்றியிருப்பது வேடிக்கை மட்டுமல்ல; காலத்தின் கோளாறுகும்!

கைத்தறிகள் இன்று விஞ்ஞான அறிவில் முன்னேறி விளங்கும் உலகத்தின் எல்லா நாடுகளிலும் இருந்திருக்கின்றன.

ஆனால் அங்கெல்லாம் கைத்தறிகள் தானாகவே அழிந்திருக்கின்றனவேயன்றி அவற்றை யாருமே அழிக்க முற்பட்டதில்லை.

பழையன கழிதலும் புதியன புகுதலும்தான் மரபு. அதன் படியே கைத்தறியைக் கண்டுபிடித்து அதை இயக்கியவர்கள் காலப் போக்கில்; தேவை அதிகமாகப் பரவியதும் விரைவையும் உழைப்புக் குறைவையும் மையமாகக் கொண்ட இயந்திர ஆலைகளைக் கண்டனர்.

—இந்த மாற்றம் யாரும் திணித்ததாக அல்லாமல், மெள்ள மெள்ள, படிப்படியாக உருவாகியதால், அதன் விளைவுகள் அதிக விபரீதமாக உருவெடுக்கவில்லை அங்கே.

இருந்தாலும் பழமைக்கும் புதுமைக்கும் அந்த நேரத்திலே போட்டியொன்று உருவெடுத்தது.

புகை வண்டியின் வரவால் வயலிலே அமைதியாக மேய்ந்து கொண்டிருக்கும் மாடுகள் மிரண்டு ஓடும்—என்று கூறி ரயில் வண்டிகளை எதிர்த்த மனப்போக்கினர் ஆலையின் நுழைவால் உழைப்பாளர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு இரையாகி விடுவார்கள் என்ற எண்ணம் மேலோங்கி; அவர்கள் கூட்டணி அமைத்து இயந்திரங்களை யெல்லாம் உடைத்துச் சுக்கு நூறுக்கும் வேலையில் ஈடுபட்டார்கள்!

ஆக; ஆலை வேண்டுமோ; கைத்தறி வேண்டுமோ—என்கிற கேள்வி இங்கிலாந்து போன்ற மேலை நாடுகளிலும் தோன்றியிருக்கிறது.

ஆனால் எப்போது?

ஒரு நூற்றாண்டிற்கு முன்பு!

அந்தக் கேள்வி தோன்றி, இங்கிலாந்து போன்ற நாடுகள் தக்க பதில் கண்டு கொண்ட ஒரு நூற்றாண்டு காலத்திற்குப் பிறகுதான் நமது நாட்டிலே அந்தக் கேள்வியே கோர சொரூபம் எடுக்கத் துவங்கியிருக்கிறது!

நாம் என் இப்படி ஒரு நூற்றாண்டு பின்னடைந்தோம்? எந்த சக்தி நம்மை அப்படி முன்னேறவொட்டாமல் தடுத்து நிறுத்தியது?

—என்பன போன்ற கேள்விகள் நமது கண்களிலே கண்ணீரை வரவழைக்கத் தக்கனவாய் அமைந்திருக்கின்றன.

எலி ரோமத்திலும் ஆட்டு ரோமத்திலும்கூட ஆடைகள் செய்து வாழ்ந்தது தமிழகம்!

பாம்புச் சட்டை போன்ற மிக மெல்லிய ஆடைகளை யெல்லாம் பல நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே தமிழகத்து நெசவாளிகள் தயாரித்துப் புகழ் பெற்றிருக்கிறார்கள்!

—இந்த நிலை இடையிலே கெடாமல் அப்படியே வளர்ந்திருக்குமேயானால் காலப்போக்கில் தமிழனும் கைத்தறியில் காலப்போக்கில் ஏற்ற மாறுதல்களைச் செய்து நாட்டுக்கேற்ற முறையில் இயந்திரத்தைக் கண்டு பிடித்திருப்பான்.

ஆனால் இயற்கை சதி செய்து விட்டது. வரலாற்றிலே ஏற்பட்ட தொடர்ந்த குழப்பங்களும்; அதன் பிறகு இந்த நாட்டில் வந்து புகுந்த வெள்ளையர் ஆதிக்கமும் தொழில்துறை வளர்ச்சியைத் தடுத்து விட்டன!

விழிப்பு இப்போதுதான் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அதற்குள்ளாகவே உலகம் ஒரு நூற்றாண்டு முன்னால் போய் விட்டது.

அதனால் ஏனைய மேலை நாடுகளுக்குப் பத்தாம் பசலியாய்த் தோன்றும் "கைத்தறியா? ஆலையா?" என்கிற கேள்வி இப்போது நம் நாட்டிலே தோன்றியிருக்கிறது.

கைத்தறிதான் வேண்டும்—என்று யாரும் வாதிட்டு வெற்றிபெற முடியாது, இப்போது. ஏனெனில் கைராட்டையே பிரதானம்-என்று ஒரு காலத்தில் உபதேசித்துக் கொண்டிருந்த காந்தி சீடர்கள்கூட இப்போது வேறு திசையில் நடை பழக ஆரம்பித்து விட்டார்கள்.

கைத்தறியா; ஆலையா-என்கிற போட்டி வரும்போது ஆலையொன்றினால்தான் நிலைத்து நிற்கமுடியும்.

ஆனால் அதற்குள்—ஆலை மட்டுமே சர்வாதிகாரம் செலுத்தப் போகும் அந்த வருங் காலத்திற்குள் கைத்தறியை நம்பி வாழும் இலட்சோப இலட்சம் குடும்பங்களின் கதி?

—அதனால்தான் மனிதாபிமானம் என்கிற ஒரே அடிப்படையில்; நாம் எல்லோரும் கைத்தறிக்காக—அந்தத் தொழிலை நம்பி வாழும் இந்தத் தலைமுறையினர் மட்டுமாவது நிம்மதியாக வாழவேண்டுமே என்ற ஒரே நம்பிக்கை காரணமாக—கைத்தறியும் ஆலையோடு வாழ வேண்டுமென்கிறோம்.

ஆனால் வடநாட்டுப் பேரரசோவெனில் கைத்தறியை நம்பியிருக்கும் இந்தத் தலைமுறையினரையும் நாசமாக்கும் நசி வேலையில் ஈடுபட்டிருக்கிறது.

இந்திய உபகண்டம் முழுவதிலும் தென்னகத்தில் இருப்பதைப் போலவே கைத்தறியாளர்கள் பரவியிருந்தால் இந்த நிலைமை எழுந்திருக்காது.

ஆனால் இந்தச் சிறு விஷயத்திலும்கூட தென்னாட்டிலிருப்பதைப்போல வடநாட்டிலே நிலைமைகள் இல்லை.

அங்கே ஆலைகள் அபரிமிதமாகப் பெருகிக் கிடக்கின்றன. எனவே அவைகளுக்கு அபரிமிதமான ஆதரவு தர வேண்டிய நிலை அவர்களுக்கு.

அதனால்தான் பிரச்சினை இங்கு இருப்பதற்கும் விந்தியத்திற்கு அப்பால் இருப்பதற்கும் மேட்டிற்கும் மடுவிற்கும் உள்ள வேறுபாடு இருக்கிறது என்று சுட்டிக் காட்டுகிறோம்.

இதை நாம் மட்டுமல்ல; தொழில் அமைச்சர் கனம் வெங்கட்ராமன்கூட கைத்தறி நெசவாளர்களின் கூட்டுறவு சங்கங்களின் அவசர மாநாட்டில் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார்:

"வேறு மாநிலங்கள் வேறு வகையான பிரச்சினையால் பாதிக்கப்பட்டிருக்கலாம்; சென்னை—ஆந்திர மாநிலங்களின் பிரச்சினை வேறு என்பதை மத்திய சர்க்கார் உணரத் தவறிவிட்டது; இந்த இரண்டு மாநிலங்களிலும் பிரச்சினை, விற்பனையைப் பொறுத்தது; எனவே எல்லாவற்றிற்குமாகச் சேர்த்துக் கூறப்படுகிற ஒரே வகையான பரிகாரம், சென்னை—ஆந்திர மாநிலங்களுக்கு எவ்வளவு கஷ்டத்தைத் தருகிறது என்பதைச் சுலபமாகப் புரிந்து கொள்ளலாம்....

"சென்னையைப் பொறுத்த பிரச்சினை 'வாழ்வா — சாவா' என்ற போராட்டமாகும் ...!"

தமிழகத்திலே எழுந்துள்ள பிரச்சினைகள் எல்லாமே வேறுபட்டதுதான். அவை 'ஏக இந்தியா என்ற கண்ணோட்டத்தில் தீர்க்கப்படும்போது என்னென்ன தொல்லைகள் உருவாகின்றன—என்பதற்கு அமைச்சரின் பேச்சு ஒரு அழகான எடுத்துக் காட்டு!

மாநாட்டிற்குத் தலைமை வகித்த திரு. எம். பி. நாச்சிமுத்து அவர்களின் பேச்சு மேலும் நிலைமை விளக்கம் தருவதாய் இருக்கிறது:

"ஒருபுறம் ஆலைத் துணிகளும் ஏராளமாகத் தேங்கியிருக்கின்றன. ஆண்டொன்றுக்கு 500 கோடி கெசம் உற்பத்தி செய்யவேண்டும் என்ற திட்டத்தின் இலட்சிய அளவை ஆலைகள் ஏற்கனவே எட்டிவிட்டன. மேலும் ஏற்றுமதியும் சமீப காலமாகக் குறைந்து விட்டன என்பதால், உள் மார்க்கெட்டிலும் துணித் தேக்கம் அதிகமாகிவிட்டது.

"மறுபுறம் சமீப ஆண்டுகளில் கைத்தறித் துணி உற்பத்தியும் அதிகரித்து வருகிறது. ஆனால், கடந்த மாதம் முதல், கைத்தறித் துணி விற்பனைக்குத் தரப்பட்டு வந்த—ரூபாய்க்கு ஒன்பது காசு 'ரிபேட்' ஆறு காசாகக் குறைக்கப்பட்டுவிட்டது. மாநிலத்தில் நெசவாளருக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியை அதிகப்படுத்த இதுவே திருப்பமாக அமைந்தது.

"இதுமட்டுமல்ல; விற்பனை வரிக்குப் பதிலாக, 'எக்சைஸ்' வரி விதிப்பு அமுல் செய்யப்பட்டதும், 'நடுத்தர' வகை ஆலைத் துணிகளுக்கு ரூபாய்க்கு அரையணா 'ரிபேட்' தருவது என்ற ஏற்பாடும் கைத்தறியை வெகுவாகப் பாதித்து விட்டது. கைத்தறி, ஆலைகளுடன் போட்டியிட முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது.

"இன்று ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடி, கூட்டுறவு இயக்கத்தின் அடிப்படையையே தகர்த்துவிடும் போலிருக்கிறது; பல நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மூடப்படலாம் என நான் அஞ்சுகிறேன்.

"எனவே, இது விஷயத்தில் சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோருகிறேன்."

—எனவே மத்திய அரசும், ஏக பாரதப் புத்திரர்களும் வடக்கிற்கும் தெற்கிற்கும் உள்ள பேதத்தை உணர்ந்து; உடனடியாக முடிவு காணுவதுதான் அறிவுடைமை என்பதை அறிவுறுத்துகிறோம்.

ஆழாக்கு மண்

"ஏ...லோ..."

"ஏலே...லோ..."

"மூச்சை பிடிச்சு..."

"...இழு...இழு...இழு..."

"ஏ...லோ..."

அந்த உற்சாகமூட்டும் பாட்டுக் கொப்ப இருபது தொழிலாளிகள் ஒரே மூச்சாக 'ரோலரை' இழுத்துக் கொண்டிருக்கின்றனர். மலை போன்ற அந்த 'உருட்டுக் கல்'லை அசைக்க நாற்பது கைகள் ஆயாசப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அவர்கள் சாலைத் தொழிலாளர்கள். நகரத்திலுள்ள நெடுஞ் சாலைகளையும் குறுஞ் சாலைகளையும்—போக்கு வரத்துக்கும் மக்களுக்கும் பயன்படும் வண்ணம் கண்ணாடி போலாக்கிக் கொடுப்பது அவர்கள் வேலை.

அந்தக் கூட்டத்தில் வயதான தொழிலாளி பௌலோ அண்ணன். ஐம்பது வசந்தங்களைக் கண்ட அவனைப் பார்க்கும் போது எழுபது வயதான கிழவன்போல் தோன்றும். தலை நரைத்துவிட்டது. முதுகு கூனிவிட்டது. எவ்வளவு கடினமான வேலையானாலும் பௌலோ அண்ணன் அந்த உத்வேகம் உண்டாக்கும் பாட்டைப் பாடினால் தொழிலாளர்களுக்கு அந்த வேலை ஒரு தூசி! இயந்திரம் போல் அந்த மலைப் பாறை உருட்டுக்கல் உருளும்.

தொழிலாளர்கள் சொல்வார்கள், "பௌலோ ரோலரைப் பிடிக்கவேண்டாம். அங்கே எங்கேயாவது நின்று ரோலரில் பிடிக்கும் மண்ணை எடுத்தால் போதும்!" என்று.

ஆனால் அந்த வேலைக்கும் கொஞ்சம் பொறுப்பும் பழக்கமும் வேண்டும். தாளத்திற்கேற்ப மண் வெட்டியினால் ரோலரில் பிடிக்கும் மண்ணை நீக்கிக் கொண்டு பின்னால் நடக்க வேண்டும். பின்னால் கால் வைத்து நடக்கும்போது கொஞ்சம் தவறினால்...அவ்வளவுதான்...உருட்டுக் கல் யானையைப் போல் உருண்டு உயிருக்கே உலை வைத்துவிடும்.

முதலில் சாலையிலுள்ள சல்லிக் கற்களைப் பெயர்த்து, புதிய கற்களையும் கொஞ்சம் வீசிவிட வேண்டும். அதற்கும் பௌலோ தயார்தான். மூலையிலுள்ள தேனீர் கடையில் இரண்டு துண்டு ரொட்டியும் 'டீ'யும் சாப்பிட்டு விட்டு எல்லோருக்கும் முன்பாக பௌலோ வந்து விடுவான்...அது மட்டுமே அவன் சாப்பாடு!

மற்றவர்கள் சொல்லுவார்கள், "எப்பொழுதும் சாப்பிடாமல் காலம் தள்ளினால் எப்படி இன்னும் கொஞ்ச நாளைக்கு இருக்க முடியும் அண்ணே? சுவரிருந்தால்தானே சித்திரம் எழுதமுடியும்...!" என்று.

"ஓ! எனக்கு ஒருவேளை சாப்பாடுதான் உண்டே...அது ராத்திரிக்கு..."

"இப்படி வயிற்றைக் கட்டி பாடுபட உங்களுக்கு என்ன இருக்கிறது...பௌலோ அண்ணன்...?"

"எனக்கு ஒன்றுமில்லேன்னு உங்க நினைப்பு? என் மகளை கட்டிக் கொடுக்க வேணுமா?"

அவனது ஒரே மகள்தான் சாராம்மா...அவனுடைய ஒரே ஆசை, தன் மகளை நல்ல நிலையிலுள்ள ஒருத்தனுக்குக் கட்டிக் கொடுக்க வேண்டும். அவளுடைய தாய் மரண வேதனையில் வாங்கிய உறுதி அது! சாப்பிடாமலிருந்தும், கூலியில் அரை வயிற்றுக் கஞ்சிக்குப் போக மீதியையும் மகளின் திருமணத்திற்காக அவன் சேர்த்து வைத்துக் கொண்டிருந்தான்.

ஆஸ்பத்திரி வார்டர் ஜார்ஜ் குட்டியும், ரிக்ஷாக்காரன் அவுசேப்பும் அவளைக் கேட்டார்கள். ஆனால் கிழவனுக்கு அவர்களுக்குத் தன் மகளைக் கொடுக்க விருப்பமில்லை.

"ஆழாக்கு மண்ணாவது சொந்தமாக உள்ள ஒருத்தனுக்குத்தான் என் மகளைக் கொடுப்பேன்...." —கிழவனின் தீர்மானம் இது!

மகள் மணப் பருவம் எய்தி நின்றும் அவனுடைய தீர்மானத்தை மாற்றிக் கொள்ளவில்லை.

'ஆழாக்கு மண்'ணுள்ள ஒருவனும் பௌலோவின் பெண்ணைக் கேட்க வரவில்லை. வந்தவர்களோ ஓராயிரம், இரண்டாயிரம் சீதனம் கேட்டார்கள்!

கூலிக்காரன் பௌலோ தன் வாழ் நாளிலேயே அவ்வளவு பெரிய தொகையை ஒன்றாகக் கண்டதில்லை. ஈசி, பௌலோவின் பக்கத்து வீட்டுக்காரன்—அவனுடன் வேலை செய்பவன். அவனும் சாராம்மா திருமணத்திற்கு மிகவும் முயற்சித்தான்.

சாராம்மா வயதுக்கு வந்து நான்கு ஆண்டுகளாகியும் அவளுக்கு பொருத்தமான மாப்பிள்ளையை பௌலோவால் கண்டுபிடிக்க முடியவில்லை.

இந்த நான்கைந்து ஆண்டிற்குள் 'உமி தின்று மணி தேடி' மகளுடைய கல்யாணத்திற்காக பௌலோ கொஞ்சம் பணம் தேடிவிட்டான். நாளாக நாளாக மகளுடைய சீதனச் சேமிப்பு ஏறிக்கொண்டு வந்தது.

மகள் தந்தையிடமும் தந்தை மகளிடமும் உயிரை வைத்துக் கொண்டிருந்தனர். வேலைக்குப் போய் திரும்பும்போது கிழவன் எப்போதும் வெறுங் கையோடு திரும்பமாட்டான். கருவாடோ...வள்ளிக் கிழங்கோ...ஏதாவது கையிலிருக்கும்...

"மகளே...சாராம்மா..."

"என்னப்பா...?"

"மகளே, இந்த மரவள்ளியைக் கொஞ்சம் வேக வை"—பிறகு அவளையே கொஞ்ச நேரம் பார்த்துக் கொண்டிருப்பான். அவள் கொஞ்சம் களைப்படைந்திருந்தாலும் கிழவனுக்குப் பொறுக்காது.

"ஏனம்மா என்னவோபோல் இருக்கிறாய்?"

"ஒண்ணுமில்லேப்பா..." —அவள் சிரித்துக் கொண்டே சொல்வாள்.

அவள் உள்ளே போனதும் கிழவன் ஒரு பெருமூச்சு விடுவான்.

"அவளுக்குக் கல்யாணம் பண்ணவேண்டிய வயது ஆகிவிட்டது. அவளுக்கு ஈடானவள்ளியும் எல்லம்மாவும் இரண்டு குழந்தைகளுக்குத் தாயாகிவிட்டனர். என் மகள்...?"

●

திடீரென்று நான்கு நாட்களாக கிழவன் படுக்கையில் படுத்துக் கொண்டான். அவனுக்கு வாதம்...ஒருநாள் அவள் கேட்டாள்:

"அப்பா மருந்துவாங்கப் பணமில்லையே! அந்தப் பணத்திலிருந்து ரெண்டு ரூபாய் எடுத்துக் கொள்ளட்டுமா?"

"உம்.....வேண்டாம்.....வேண்டாம்...அதிலிருந்து வேண்டாம் ...அது ஒரு காரியத்திற்காக வேண்டும்..."

அவளுக்குத் தெரியாதா அந்தப் பணம் எதற்கு என்று! எப்படியோ கடன் வாங்கி மருந்து வாங்கினாள். கடைசியில் உடம்பு குணமாகி வேலைக்குப் போனதும் பௌலோ அந்தக் கடனைத் தீர்த்துவிட்டான். அது மட்டுமல்ல அந்த அழுக்கேறி நாற்றமெடுக்கும் கந்தல் துணியில் பின்னும் கால் ரூபாய்களும் அரை ரூபாய்களும் சேர்ந்தன.

●

பௌலோ முழு மூச்சோடு வேலை செய்தான். பழைய சாலைகளிலுள்ள கற்களை எல்லாம் அடியோடு பெயர்த்து—புதிய பொடிக் கற்கள் இட்டு—சமமாக்கி—நீரைக்கொட்டி....

"ஏலோ...ஏலே லோ..."

ரோலர் உருண்டது.

அந் நகரத்திலுள்ள எல்லா சாலைகளும் பௌலோவின் கைகளைக் கண்டிருக்கின்றன.

ஒருநாள் ஈசி வேலை செய்து கொண்டிருக்கும்போது சொன்னான்:

"அண்ணே! உன் மகளைப் பற்றி இன்று ஒருத்தன் என்னைக் கேட்டான்!"

"யார்...யாரு?"

"வடசேரி அமீனா வரீது குட்டியில்லே அவன்..."

"உண்மையா? என்ன கேட்டான்...?"

"சாராம்மாவுக்கு எத்தனை வயசு என்று...நான இருபத்தொன்று என்றேன்........அவனுக்கு உன் பெண்ணைக் கட்டிக்கணுமனு ஆசை இருக்கு..."

பௌலோவுக்கு நெஞ்சம் குளிர்ந்தது. "வடசேரி குடும்பம் பழம்பெருமை வாய்ந்தது. 'ஆழாக்கு மண்'ணுக்கு சொந்தமானது!"

பௌலோவின் இதயம் வேகத்தோடு துடித்தது. சீதனம்...?

●

அடுத்த ஞாயிறு அமீனா வரீதுகுட்டியும் ஈசியும் பெண் பார்க்க வந்தார்கள். பௌலோ அவர்களை அன்போடு உபசரித்தான். ஈசியின் முயற்சியால் காரியங்கள் வேகமாக முன்னேறின. அதற்கடுத்த ஞாயிறு வரீதுகுட்டியின் தந்தையும் மற்றவரும் வந்து, பெண் பிள்ளைக் குப் பிடித்து விட்டதைத் தெரிவித்தனர்.

வரீதுகுட்டியின் தந்தையும் அமீனாதான்...... 'ரிடையர்டு'... அந்தக் காலத்தில் கை நிறைய சம்பாதித்து சொந்தமாக ஒரு வீடும் கொஞ்ச நிலமும் வாங்கியிருந்தான்.

காப்பி சாப்பிட்டதும் வெற்றிலை போட்டுக் கொண்டே அந்த பழைய சர்க்கார் உத்தியோகஸ்தன் சொன்னான்:

"பௌலோ அண்ணனை எனக்கு ரொம்ப நாளாகத் தெரியும். நல்ல குணமுள்ள உங்கள் மகளைப் பற்றியும் கேட்டிருக்கிறேன். அதனால் தான் நான் ஒன்றும் மேலே பார்க்காமல் இதற்கு சம்மதித்தது."

பௌலோ சிரித்தான்.

"பையனுக்கும் பெண்ணைப் பிடிச்சிருக்கு......மற்ற லௌகிக விஷயத்திலெல்லாம ஒத்துப் போனால் உடனடியாகத் திருமணத்தை நடத்தி விடலாம்..."

பையனுடைய தந்தை தொடர்ந்தான்: "நான் அதிகம் ஒன்றும கேட்கப் போவதல்லை. உங்கள் நிலையும் எனக்குத் தெரியும். என்றாலும பழக்க வழக்கப்படி கொஞ்சம் பார்க்க வேண்டாமா? சீதனத் தொகையாக ஐநூறு ரூபாய் கொடுத்தால் உடனடியாகத் திருமணத்தை முடித்துவிடலாம்."

பௌலோ நம்பிக்கையோடு மூச்சு விட்டான. அவர்கள் ஆயிரம், ரெண்டாயிரம் கேட்கவில்லையே! அந்தத் தொகையைத் தருவதாக ஒப்புக்கொண்டான்.

பையனுடைய தந்தையும் மற்றவரும போனபிறகு கிழவன் மகளைக் கூப்பிட்டான்:

"சாராகுட்டி...அந்த கைப் பெட்டியை இங்கே கொண்டுவா..."

அவள் கைப் பெட்டியைக் கொண்டு வந்தாள் இப்பொழுது அவள் முகம் வெளிறியில்லை அவள் இதழ்களில் புன்னகை தவழ்ந்தது. பேசி

[தொடர்ச்சி பக்கம்-9]

மலையாள மூலம்:
டாட்டாபாம் சுகுமாரன்

தமிழில்:
தாம்பரம் மூர்த்தி

கேரளம் சிவப்பாயிற்று; நாமும் மகிழ்ந்தோம், ஒரு இடது சாரிக் கட்சிக்கு அந்தப் பெருமை கிடைத்ததே என்பதற்காக! ஆனால் அந்த மகிழ்ச்சி நீடிக்கா வண்ணம் இப்போது இடி போன்ற செய்தியொன்று வந்திருக்கிறது.

பிரபல நிலவுடமைக்காரராகிய கேரளத்து அமைச்சர் கிருஷ்ணய்யர், யாரும் 15 ஏக்கராவுக்குமேல் நிலம் வைத்திருக்கக் கூடாது என்கிற சட்டத்தைப் பிறப்பித்தார்! அமைச்சர் கிருஷ்ணய்யர் முதலமைச்சர் நம்பூதிரியாரைப்போல தனது உடமைகளையெல்லாம் தியாகம் செய்து விட்டு பொதுவுடமைக் கட்சிக்கு வந்தவரல்ல; அவரே பெரிய நிலச்சுவான்தார்! தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்ட் கட்சியின் அகராதிப்படி சொல்லப்போனால் கிருஷ்ணய்யர் கேரளத்தின் பி. டி. ராஜன்! இருந்தாலும் கேரளத்து மந்திரிசபை அவருக்கு இடமளித்தது. அவரும் கட்சிக் கட்டுப்பாட்டுக்கேற்ப நில உரிமைச் சட்டம் கொண்டு வந்தார்.

யாரும் 15 ஏக்கராவுக்கு மேல் வைத்துக் கொள்ளக் கூடாது என்பது சட்டத்தின் நோக்கம். ஆனால் நிலப் பிரபு கிருஷ்ணய்யர் 15- ஏக்கரா போக மீதியை அரசாங்கத்திற்குக் கொடுத்து விட்டார் என்று நினைக்கிறீர்களா?

அதுதான் இல்லை; சட்டம் அமுலாவதற்கு முன்னமேயே தனது சொத்துக்களின் பெரும் பகுதியைக் கோவிலுக்கு எழுதி வைத்து விட்டார்! கோவிலுக்கு சொத்து எழுதி வைப்பது என்றால் என்ன?

கிருஷ்ணய்யர் அரசாங்கத்தின் கண்ணில் மண்ணைத் தூவி தனது சொத்துக்களை தனது குடும்பத்தவரும் குலத்தவரும் அனுபவிப்பதற்குக் கொடுத்திருக்கிறார்!

சாமிக்குச் சொத்து கொடுத்ததாகப் பெயர்; ஆனால் கம்யூனிஸ்ட் அரசாங்கத்தில் தனிப்பட்ட நிலப்பிரபுவின் சொத்தை எந்தச் சாமி அனுபவிக்கிறது என்பதைத்தான் மலையாள ஏடு "சரசன்" தீட்டியிருக்கும் இந்தச் சித்திரம் காட்டுகிறது.

• • •

இந்தியாவிலேயே கல்விக்கு முதன்மையாகத் திகழக்கூடிய கேரளம் எத்தனையோ விதமான அரசாங்கங்களைக் கண்டிருக்கிறது. மன்னர் ஆட்சி; பின் காங்கிரசாட்சி; அதற்குப்பின் மைனாரிட்டி அங்கத்தினர்களைக் கொண்ட பி. எஸ். பி. ஆட்சி; பின் சனாதிபதியின் நேரடி ஆட்சி; கடைசியாக இப்பொழுது "மக்களுக்கென்றே மாடாக உழைக்கின்றோம்" என முழக்கம் செய்துவரும் அகில உலக வாதிகளான கம்யூனிஸ்ட் ஆட்சி என்று அந்தப் பட்டியல் பெருகியிருக்கிறது!

முதன் முறையாக ஆட்சி பீடமேறியிருக்கிறதே பொதுவுடமைக் கட்சி; புதியன பல செய்து காட்டும்; புகழாரங்கள் சூட்டிக் கொள்ளும் என்றுதான் உலகமே எதிர்பார்த்துக் கொண்டிருந்தது!

எப்படியோ ஒன்றிரண்டு சுயேட்சைகளைச் சேர்த்து மந்திரி சபையும் அமைத்துக் கொண்டனர். ஆனால்,

உலகமே கேரளத்தைப் பார்க்கிறது எனக் கதறித் திரிந்தவர்களுக்கு ஏன் அமைச்சர்களின் கண்ணியமற்ற சுய நல சித்தாந்தம் தென்படவில்லை என்பது தான் வேடிக்கையாகவும் வேதனையாகவும் இருக்கிறது.

ஏன் தென்படப் போகின்றது! உலகம் பார்த்த கேரளத்தை தி. மு. கழகமும்தான் பார்த்தது. சர்வாதிகார மன்னர்களின் முரட்டுப் பிடியிலிருந்த கேரளம்—திராவிட நாட்டின் ஒரு மொழி பேசுகின்ற இனம்—ஒரு இடது சாரிக் கட்சியின் கவனிப்பிலே வந்ததே என பெருமைப்பட்டோம்.

ஆனால் கடமை பேசியவர் தார்; அவரே நிலச் சட்டம் கொண்டு வந்தார்.

மக்கள் மகிழ்ந்தனர்; நில உடமையாளர்களுக்கு நடுக்கம் கண்டது. 15 ஏக்கராவுக்குமேல் யாரும் வைத்துக் கொள்ள இந்த சட்டம் அனுமதிக்காது.

பெருமளவு நிலம் காத்து—உழைப்பை உறிஞ்சி ஏப்பமிட்டு வந்த எத்தர்களின் திமிரை நொறுக்க சட்டம் வந்தது—என்று மகிழ்ச்சி கொண்டனர்; ஆட்சி மாற்றத்தின் நல்ல நடவடிக்கையைக் கண்டு பலர். ஆனால்—அதனால் பாதிக்கப்பட்டவர்கள் கண்ணைக் கசக்கினர்.

மந்திரியின் உற்றார் உறவினர்களும் கண்ணைக் கசக்கிக்கொண்டனர். ஏன்? அச் சட்டம் வந்தால் பெருவாரியாக நஷ்டம் அடையக்கூடியவர் அமைச்சரே!

அவரிடம் என்ன சொல்லி கம்பக்கமாக அடித்துத் தன்னின இச்செய்தியை.

அந்தோ, ஏமாற்றம்! மந்திரி அவர்கள் தனது சொத்துக்கள் யாவும் அவரது குடும்பத்தைச் சார்ந்த கோயில் பேருக்கு எழுதி வைத்துக் கொண்டு வெறும் மேற்பார்வையாளராக காட்சி அளிக்கிறார்.

குதூகலப்பட்டவர்கள் கோபாவேசம் கொண்டனர்.

புகழ் பாடியவர்கள் எள்ளி நகையாடினர்.

கேரளத்தைப் பார்க்கச் சொன்னவர்கள் பதுங்கிக் கொண்டனர்.

கட்சியின் கொள்கை—

அமைச்சரவை கடைப்பிடிக்க வேண்டிய கண்ணியம்—

தேர்தல் காலங்களிலே தேனில் குழைத்துத் தந்த உறுதிமொழி—

கேரளத்திலே கோணல் நிலை; கொக்கரிப்போரே; கவனிப்பீர்!

"பார் எங்கள் கேரளத்தை! எங்கள் கட்சி சனநாயக ரீதியிலே தேர்தலுக்கு நின்று வெற்றி வாகை சூடி இப்பொழுது ஆளும் கட்சியாக பவனி வருவதைப் பாரா!" என இங்கு ஒளி இழந்து, மக்களிடம் மதிப்பற்று; அனாதைகளாகக் காட்சி அளிக்கும் மாஸ்கோ மோகங் கொண்டவர்கள் சண்டப் பிரசண்டம் செய்வதைக் கேட்டகாழும் பார்த்தோம் கேரளத்தை; ஒரு முறையல்ல; பன்முறை பார்த்தோம்; இப்பொழுது ஓரளவு புரிந்துகொண்டுமிருக்கிறோம்!

பாவம்; அவர்களென்ன செய்வார்கள்; தேர்தல் நேரத்திலே தொண்டை கிழியக் கத்தினார்கள். மக்களிடம் அநேகம் திட்டங்களைச் சொன்னார்கள்.

கள் கயமைத்தனமாக காட்சியளிக்க ஆரம்பித்து விட்டார்கள்.

மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை மறந்து "சொந்தக் காரியம் சிந்தாபாத்" போடத் துவங்கியதுதான் வேதனையளிக்கும் விந்தை நிகழ்ச்சியாகும்.

'பொது உடமையே எமது லட்சியம்' என்று பேசியவர்கள் தங்களது சொந்த 'உடமை'யை இழக்க மனம் துணியாத நிகழ்ச்சி ஒன்றை நாம் அறிகிறோம். அதற்காக உலகத்தின் கண்களைக் கட்டி விட்டோம் என்று எண்ணி திரைமறைவிலே நடத்திய செயலை படியுங்கள்.

கேரளத்து அமைச்சர் கிருஷ்ணய்யர் பெரிய நிலச்சுவான்

என்ன பயன்? கட்சியின் கொள்கை, கண்ணியம்; தேர்தல் காலங்களிலே மக்களுக்கு அளித்த வாக்குறுதிகள் யாவும் அமைச்சர் அறிந்தவைதானே!

கேரளமே குதூகலப்பட்டது. அரசாங்கமென்றால் இதுவல்லவோ அரசாங்கம்! ஆண்டார்களே பணம்பண்ணியும், பட்டமும்? கம்யூனிஸ்ட் கட்சியின் பேச்சும்செயலும் வேறுவேறாக இருக்குமா? பாருங்கள்; மக்கள் தொண்டர்களின் மனப்பாங்கை அறிந்து ஏகபோக நிலவுடமைகளுக்கு உரிமை படைத்தவரே இச்சட்டம் கொண்டு வருகிறாரே; அவரது தியாகமே தியாகம்! இப்படி எத்தனை எத்தனையோ விதமாக மக்கள் பேசிக் கொண்டனர்.

பத்திரிகைக் கூட்டமோ பக்

அத்தனையும் தூள்! தூள்! தூள்!

கண்ணியம் பேசும் ஈ. எம். எஸ். நம்பூதிரிபட்டாவது இந்த பிரச்சனைக்கு நல்ல முடிவைக் காட்டியிருக்கலாம். ஏனென்றால்; அமைச்சர்களில் யார் ஏதாவது மக்களுக்கு நம்பிக்கையற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டாலும் அது மொத்தமாக அமைச்சரவையே சேரும் என்பது சனநாயக உண்மை.

ஆகவே மந்திரி கிருஷ்ணய்யர் காட்டியது கண்ணியம்தானா? இதுதானா கம்யூனிஸ்ட் ஆட்சியின் கடமை? மக்களுக்கு விளக்கம் தேவை; இல்லையென்றால் காலம் சம்பந்தப்பட்டவர்களுக்கு விளக்கும் என்பதை நாம் கூறிக்காட்ட வேண்டியதில்லை.

—இங்கர்சால்

சுருளிமலை

மு. கருணாநிதி

4

"கல்யாணத்துக்கு மறுநாளே வீட்டில் ஏற்பட்ட அசம்பாவிதமான சாவுச் செய்தியால் உறவினர்கள் எல்லாம் அங்கலாய்த்துக் கொண்டனர். மாப்பிள்ளை குடும்பத்துக்கு ஆகாத ஒன்று நடந்து விட்டதாக ஒருவருக்கொருவர் முணு முணுத்துக் கொண்டனர். கல்யாணத்துக்கு வந்திருந்த என் சொந்தக்காரர்கள் சிலரைத் தவிர மற்ற யாவருமே என்னைச் சற்று வெறுப்போடுதான் பார்த்தார்கள். அப்பாவின் பிணத்தின் மீது விழுந்து அலறினேன். என் சோகம் இரட்டிப்புப் பங்காக மாறுவதற்குக் காரணம் இருந்ததைத்தான் நீங்கள் அறிவீர்களே, இப்போது! நல்ல வேளையாக நான் திக்குத் தெரியாத காட்டில் அகப்பட்டுக் கொண்டு திகைப்பதை என் தந்தை அறிந்து வேதனைப்படாமலேயே போய்விட்டார் என்ற திருப்தி ஏற்பட்டது எனக்கு. சாயங்காலத்திற்குள் அப்பாவின் தகனக்கிரியை எல்லாம் முடிந்து விட்டது.

"இருள் வேகமாகப் பரவிக் கொண்டிருந்தது. என் வாழ்க்கையில் அதற்கு முன்பே இருள் மூடிக் கொண்டது. நாளுக்கு தேடிக் கொண்ட வேதனையை நினைத்து நினைத்து அழுதேன். என் கணவர் உட்பட அனைவருமே அப்பாவை நினைத்துத்தான் அழுது புலம்புகிறேன் என்று எண்ணிக் கொண்டு ஆறுதல் சொல்ல ஆரம்பித்தார்கள். வீட்டில் துக்கமெல்லாம் கொண்டாடி பத்து நாட்கள் கழித்த பிறகு மறுபடியும் என் கணவரைத் தனியறையில் சந்திக்க வேண்டிய பயங்கரமான நேரம் நிச்சயம் வருமே — அய்யோ; அதை நினைத்தாலே எனக்குத் தலைசுற்ற ஆரம்பித்து விட்டது. பத்து நாள் கழித்துத்தானே அந்த நெருக்கடி வரப் போகிறது; அதுவரையில் அவர் வீட்டிலேயே இருந்து சமாளித்துப் பார்ப்போமே — என்று முதலில் நினைத்தேன். ஆனால் வேறொரு பயம் வந்து என்னைச் சூழ்ந்து கொண்டது. அந்தப் பத்து நாளில் அவர் என்னோடு பழகுவதில் என்னிடம் மிகுந்த அன்பையும் பிரியத்தையும் காட்டி, ஒரு கணவனிடத்தில் ஒரு பெண்ணுக்கு ஏற்படுகிற பாசம் இல்லாவிட்டாலும், ஒரு வயதான பெரியவரிடத்தில், தகப்பனிடத்தில், பாட்டனிடத்தில் ஏற்படுகிற பற்றோ பாசமோ எனக்கு அவர்மீது ஏற்பட்டுவிட்டால் என்ன செய்வது என்று சந்தேகப்பட்டேன். மிகவும் பயந்தேன்.

"நான் நினைத்தது போலவே அவர் என்னிடம் தந்தை இறந்தது பற்றிக் கவலைப்படாதே யென்று ஆறுதல் சொல்ல முன் வந்தார். நாடகத்திற்காக மனப்பாடம் செய்திருப்பாரோ என்னவோ தெரியவில்லை; 'ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ?' என்று பாட்டெல்லாம் சொல்லிக்காட்டி எனக்குத் தேறுதல் கூறினார்.

"நான் முடிவு செய்து விட்டேன்; இனி ஒருக்கணமும் அவரோடு வாழ்வதில்லையென்று! இந்த முடிவு பெரிய மனப் போராட்டத்திற்குப் பிறகுதான் தோன்றியது என்பதையும் நீங்கள் உணரவேண்டும்.

"'அவர் உன் கணவராயிற்றே — அவருக்குத் துரோகம் செய்யலாமா?' என உபதேசம் செய்தது மனம். பிறகு அதே மனம், 'செய்தால் என்ன? அவர் மட்டும் வெளி வேஷத்தால் உன்னை மயக்கித் துரோகம் செய்யவில்லையா?' என்று சமாதானமும் கூறியது.

"'அடிமுட்டாளே! அவரா உன்னிடம் வந்து என்னைக் கல்யாணம் செய்து கொள் என்று கேட்டார். நீதானே தேடிப் போனாய்! இப்போது அவரைக் குற்றம் சுமத்துவது முறையா?' என்ற ஒரு கேள்வி என் நெஞ்சில் தோன்றும். உடனே; அதற்குப் பதிலும் உதயமாகிவிடும்.

"தேடிப்போனது உண்மை என்றாலும், அந்தக் கிழவர், தான் யார் என்ற சுய உருவத்தைக் காட்டியிருப்பாரேயானால் இப்படி ஒரு ஏமாற்றமும், ஏக்கமும் பிறந்திருக்காதல்லவா? அதனால் அவரே குற்றவாளி!

"ஆமாம்; இதுதான் நானே வழக்காடி, நானே வழங்கிக் கொண்ட தீர்ப்பு! தீர்ப்பின்படி நான் அவரைவிட்டு உடனடியாக வெளியேறிவிட வேண்டும்.

"அன்றிரவே என் பயணத்திற்கு ஆயத்தமாகி விட்டேன். எல்லோரும் தூங்கிக் கொண்டிருந்தார்கள். அவர் அறைக்குள்ளே படுத்திருந்தார். எனக்கு எப்படித் தூக்கம் வரும்? மெதுவாக எழுந்தேன். என் தந்தையின் பிணம் காலையில் வைக்கப்பட்டிருந்த கூடத்தில் மினுக் மினுக் என எரிந்து கொண்டிருந்த விளக்கிற்கு ஒரு கும்பிடு போட்டேன். கொல்லைப்புறக் கதவைத் திறந்து கொண்டு வெளியே புறப்பட்டேன். அதுவரையில் கதவண்டை உட்கார்ந்து வெளியே போவதற்கு வழி பார்த்திருந்த இந்தப் பூனையும் என் பின்னால் வெளியே வந்தது. தனியாகப் போவானேன் என்று என் கணவர் வீட்டுச் சொத்தான பூனையையும் தூக்கிக் கொண்டேன்.

"அடுத்த கேள்வி, எங்கே போவது என்று! சிங்காநல்லூருக்கே போய் விடுவோம் என்று முதலில் நினைத்தேன். ஊர் வாயை மூட முடியாதே என்ற அச்சம் — கணவர் கண்டுபிடித்து விடுவாரே என்றதில் — அதனால் அந்த எண்ணத்தை மாற்றிக்கொண்டேன். எங்கெங்கோ அலைந்தேன். கடைசியில் இந்த ஊர் வந்து சேர்ந்தேன். குடியிருப்பதற்குக் குறைந்த வாடகையில் இந்த வீடும் கிடைத்தது. கையிலிருந்த கொஞ்சம் பணம் — போட்டிருந்த நகை நட்டுகளை விற்றதில் கிடைத்த பணம் — அதை வைத்துக் கொண்டு வயிறு கழுவி வருகிறேன். போதுமா; இன்னும் சொல்ல வேண்டுமா என் கதையை?" என்று அழுதவாறு மைனா முடித்தாள்.

"இனிமேல் உன் கதையை நான் சொல்லுகிறேன்!" என்று சிங்காரம் கனைத்துக் கொண்டு ஆரம்பித்தான்.

என்ன சொல்லப் போகிறான்

முன் இதழ்களில்...

வழக்கம்போல் வேப்ப மரத்தடியில் அமர்ந்து குழலூதிக் கொண்டிருக்கிறான் சுருளிமலை. அங்கே தீச்சட்டி சிங்காரம் வருகிறான் இளம் போதையுடன்! அவன் பல ஊர்களில் தீச்சட்டி ஆட்டத்துக்குப் போய் வந்த கதையை சுருளிமலையிடம் கூறி, ஒரு ஊரில் ஓர் அழகான பெண்ணைப் பார்த்த விபரத்தையும் சொல்லுகிறான். அவர்கள் பேசிக் கொண்டிருந்த மரத்தின் கிளையில் ஒரு பெண் தூக்கிட்டுக் கொண்டு தொங்குவதைக் காட்டிய சுருளிமலை, பஞ்சாயத்தாரை அழைக்கப் போகிறான். தன் பைத்தியக்காரப் பிள்ளையுடன் போராடிக் கொண்டிருக்கும் பஞ்சாயத்தார் வேப்ப மரத்தடிக்கு வருகிறார். தூக்கு மாட்டிக் கொண்ட பெண்ணின் முகத்தைப் பார்த்த தீச்சட்டி சிங்காரம் "அய்யோ! நீயா?" என உரக்கக் கூவி மயக்கமுற்றுக் கீழே சாய்கிறான்...

யார் அவள்?......

தூக்கிலே தொங்கிய அப்பெண்ணை தீச்சட்டி சிங்காரம் சமயபுரம் திருவிழாவில் சந்தித்திருக்கிறான். தீச்சட்டியிலே எண்ணை ஊற்றிய அவளுக்குத் திலகமிட்டதோடு...தன் கவனத்தையும் அவள் பக்கம் விட்டு வைக்கிறான். பார்வையை அவள் மேலேயே பதித்திருந்த காரணத்தால், பாதி ஆட்டத்திலேயே தீச்சட்டியையும் கீழே போட்டு உடைத்து விடுகிறான், வாழ்க்கையிலேயே முதல் முறையாக! கோவில் நிர்வாகியின் மூலம் அவள் பெயர் 'மைனா' என்று அறிந்ததோடு, இருக்குமிடம் தேடிச் செல்கிறான்......

சாத்தப்பட்டிருந்த மைனாவின் வீட்டுக் கதவை மெதுவாகத் திறக்கிறான். உள்ளே அவளும், அவளது அணைப்பிலே அவளுடைய அருமந்த பூனைக் குட்டியும் உறக்கத்திலாழ்ந்திருக்கிறார்கள். ஆனால் தீச்சட்டி சிங்காரமோ அவளது கழுத்திலே அவன் எதிர்பார்த்திராத 'தாலி'யைக் கண்டதும் அங்கிருந்து ஓடிவிட முயல்கிறான். கால் இடற — பாத்திரம் உருள — பூனை அவன் கழுத்திலே பிராண்ட — விழித்த மைனா 'திருடன்' என்று கத்துகிறாள்......

திருடன் எண்ணத்தோடு அங்கே நுழைந்த சிங்காரத்திடம், தன் 'தாலி'யின் சோகக் கதையைச் சொல்லுகிறாள், மைனா...

சிங்காநல்லூர் பஞ்சாலைத் தொழிலாளியின் ஒரே தாயற்ற மகள் மைனா. பருவமடைந்த அவள், ஆலை ஆண்டு விழாவிலே அர்ச்சுனன் வேஷம்போட்டு நடித்த பீதாம்பர பாகவதரின் நடிப்பிலே — அழகிலே மயங்கிவிடுகிறாள். தந்தையின் சம்மதத்தோடு மாப்பிள்ளை ஊரான பேரூரிலே திருமணமும் நடக்கிறது.........

ஆனால் முதலிரவிலேயே தன் வாழ்வு சூனியமாகிவிட்ட உண்மையை அவள் அறிகிறாள். ஆண் அழகராக வேஷம் போட்டு வந்த பீதாம்பரம் பொக்கை வாய்க் கிழவர் — பெரு வியாதி பிடிக்கப்பட்டப் பிறவி என்ற உண்மைகளைக் கண்டு குமுறுகிறாள்....

விடிந்ததும் மற்றொரு பேரிடி அவளைத் தாக்குகிறது... காச நோய் பீடித்திருந்த அவள் தந்தை காலமாகி விடுகிறார்...

என்று அவளும் ஆவலோடு எதிர்பார்த்தாள்.

"மைனா என்ற பெண், நாடகக்காரனின் வெளி வேஷத்திலே ஏமாந்து, அவனையே கல்யாணம் செய்து கொண்டு, அவனது சுயரூபம் தெரிந்த பிறகு அவனை விட்டு ஓடிவந்து விட்டாள். அப்படி ஓடி வந்தவள் ஒரு நாள் தீச்சட்டி சிங்காரம் என்ற ஒரு வாலிபனை சந்திக்க நேரிட்டது. இருவருடைய கண்களும் காதல் பாஷை பேசிக் கொண்டன. சந்தித்த அதே நாள் இரவு சிங்காரம் அவளுடைய வீட்டுக்குத் தைரியமாக வந்தான். அவள் அவனிடம் தன் வாழ்க்கை முழுவதையும் சொன்னாள். அதைக் கேட்ட சிங்காரம் மனம் உருகி, நெஞ்சம் இளகி, 'கவலைப்படாதே பெண்ணே! உன்னை நான் வைத்துக் காப்பாற்றுகிறேன்!' என்று கையடித்துக் கொடுத்தான். அவளும் சம்மதித்தாள். பிறகு இருவரும் சந்தோஷமாக வாழ்க்கை நடத்த ஆரம்பித்தார்கள்."

சிங்காரம், இதுபோலக் கதையைக் கூறி, அவள் முகத்தைப் பார்த்தான். மைனாவின் கன்னங்களில் சிவப்பேறியது. தலை தானாகக் குனிந்து கொண்டது. அது, சம்மதத்தின் அறிகுறி எனப் புரிந்து கொண்ட சிங்காரம், அவள் தோள்மீது தன் முகத்தைப் பதித்தான்.

அவளும் அவன் முகத்தைக் கையால் வருடியவாறு, "என்னை மனைவியாகவே ஏற்றுக் கொண்டு எப்போதும் காப்பாற்றுவீர்களா?" என்று கண் கலங்கக் கேட்டாள்.

சிங்காரம், தழுதழுத்த குரலில், "கடவுள் மேல் சத்தியமாக உன்னை மறக்கமாட்டேன்!" என்று உறுதி கொடுத்து அவளை அப்படியே அள்ளி அணைத்துக் கொண்டான்.

அவள், அவன் பிடியிலேயிருந்து விடுபட்டு, தெருக் கதவின் தாழ்ப்பாளைச் சரி செய்து சாத்திவிட்டு, மீண்டும் அவனிடம் வந்தாள். பூனை மெதுவாக அடுப்படிக்குச் சென்று அந்தக் கதகதப்பில் படுத்துக் கொண்டது.

மைனா, தன்னை சிங்காரத்திடம் ஒப்படைத்துவிட்ட பூரிப்பில் மயங்கிக் கிடந்தாள். தன் வாழ்வில் மறுமலர்ச்சி தோன்றி விட்டதாக இன்பக் கனவு கண்டாள். சிங்காரத்தின் வாயிலிருந்து லேசாக வீசிக் கொண்டிருந்த மதுவாடை மாத்திரம் அவளுக்கு அவ்வளவு பிடித்தமானதாக இல்லை. அதையும் அவனிடம் அவள் சொல்லி விட்டாள்.

"குடிகாரன் என்று பயப்படாதே! பொழுது விடிந்தால் இந்தப் பேச்சு மறந்துவிடும் என்றும் சந்தேகப்படாதே! சாராயத்தைவிட உன்னை நான் அதிகமாக நேசிக்கிறேன். எந்தக் குடிகாரனும் இது போலச் சொல்லமாட்டான். அதனால் என்னை நம்பு! குடித்துப் பழகி விட்ட என்னை இனிமேல் மாற்றவே முடியாது!" என்று மனந்திறந்து சிங்காரம் பேசி, அவளையும் ஒப்புக் கொள்ளச் செய்து விட்டான்.

"ஏன் மைனா, முதலில்தான் வேஷம்போட்டவனைப் பார்த்து அர்ச்சுன ராஜன் என்று நினைத்து ஏமாந்துபோனாய்—இப்போதும் என்னைத் தீச்சட்டி ஆட்டத்தில் பார்த்ததும் என்மீது ஆசை கொண்டு விட்டாயே; இதிலும் ஏமாந்திருந்தால் என்ன செய்வாய்?"

சிங்காரத்தின் இந்தக் குறும்புத்தனமான கேள்விக்கு மைனா, தன் உதடுகளால் பதில் சொன்னாள். ஆனால் அந்தப் பதிலில் வார்த்தைகள் உதிரவில்லை. ஒலி மட்டுமே எழுந்தது.

தீச்சட்டியின் ஜுவாலையிலேயே கிடந்து வெந்து கொண்டிருந்த சிங்காரத்துக்கு மகிழ்ச்சியூட்ட ஒரு குளிர்ந்த மாந்தோப்பு கிடைத்து விட்டது. மைனாவுக்கும் ஒரு ஆதரவு கிடைத்து விட்டது. அவள் உள்ளத்தில் கப்பிக் கொண்டிருந்த அந்தகாரம் விலகி விட்டது. ஆனந்தத்தால் துள்ளியது நெஞ்சம். மறுநாள் காலையிலே சிங்காரம் சிற்றூருக்குப் புறப்பட வேண்டும். போய் இரண்டு நாளில் திரும்பி வந்து, மைனாவையும் அழைத்துக் கொண்டு சிற்றூரிலேயே குடித்தனத்தைத் துவங்க வேண்டும் என்று திட்டம் தீட்டப்பட்டது. பிரியா விடைபெற்று, சிங்காரம் விடியற்காலையில் அவளை விட்டுப் பிரிந்து கோயில் நிர்வாகி தனக்கு ஏற்பாடு செய்திருந்த வீட்டுக்குப் புறப்பட்டான்.

ஆயிரமாயிரம் இன்ப நினைவுகள் உள்ளத்திலே அலைமோத மைனா, வேலைகளைக் கவனிக்கத் தொடங்கினாள். படுத்திருந்த பாயைத் தொட்டுக் கும்பிட்டு, தலையணைக்கு முத்தமிட்டு, இரண்டையும் சுருட்டி வைத்தாள். அடுப்படியில் படுத்திருந்த பூனைக் குட்டியைத் தூக்கி அதன் மெல்லிய ரோமத்தைத் தடவித் தடவி, மார்போடும் முகத்தோடும் அதை அணைத்துக் கொண்டு குதியாட்டம் போட்டாள். வீட்டு வாசலுக்குத் தண்ணீர் தெளித்துப் பெருக்கினாள். என்றுமில்லாதவாறு பெரியதும், அழகியதுமான கோலமொன்று போட வேண்டும் என்ற திட்டத்தோடு கோலமாக் கிண்ணத்தோடு தெரு வாசலை முற்றுகையிட்டாள். அவள் வாசலில் வைத்த ஒவ்வொரு புள்ளியிலும் சிங்காரத்தின் கம்பீரமான முகத்தைக் கண்டாள். கோலத்திற்கென வளைந்து வளைந்து செல்லும் கோடுகளில் எல்லாம் அவள், தன் வாழ்க்கையின் வளைவை எண்ணுவாள். வளைந்த கோடுகள் இணையும் இடத்தில் எல்லாம் தானும் சிங்காரமும் இணைந்ததை எண்ணி மகிழ்வாள். பெரியதும், அழகு செறிந்ததுமான கோலம் போட்டு முடிந்தது. ஊருக்குப் போகும் போது சிங்காரம் இந்தப் பாதையில் தானே போவார்; போகும் போது கோலத்தைப் பார்ப்பார்; அப்படிப் பார்க்கும் போது இதையும் பார்க்கட்டும் என்று, தீச்சட்டிபோல சிறுகோலம் ஒன்று போட்டு, தீயின்மீது ஒரு மலர் தெரிவது போலவும் சித்தரித்தாள். அவளுக்கே அது புதுமையாகவும் அற்புதமாகவும் தெரிந்தது. கோலத்தை திருப்திக்கு ஏற்றவாறு முடித்து விட்டோம் என்ற ஆனந்தத்தில் கோலமாக் கிண்ணத்தோடு தலைநிமிர்ந்தாள்.

நிமிர்ந்தவள் திடுக்கிட்டாள். கண்கள் சுழன்றன அவளுக்கு. அவனையே அவளால் நம்பமுடியவில்லை. எதிரே பீதாம்பர பாகவதர் அவளையே வைத்த கண் எடுக்காமல் பார்த்துக் கொண்டு நின்றார். மைனா, ஒன்றும் பேசவில்லை. பேசவும் நா எழவில்லை. கோலமாக் கிண்ணம் அவளை அறியாமல் கீழே விழுந்து மாவு வாசலெங்கும் சிதறி, கோலத்தை அலங்கோலமாக்கியது.

அவள், வீட்டுக்குள் போய் விட்டாள். பீதாம்பரமும் அவளைத் தொடர்ந்து உள்ளே போனார். அவள் உள்ளே சென்று அப்படியே அசைவற்று நின்றாள். அவள் கண்கள் கலங்கியிருந்தன. அதை பீதாம்பரம் கவனிக்கத் தவறவில்லை. அவள் சொல்லாமலே பீதாம்பரம் வீட்டுக்குள் உட்கார்ந்தார். அவரைப் பார்த்த பூனை கத்திக்கொண்டு அவரிடம் ஓடிவந்தது.

"அட, நீயும் இங்கதான் இருக்கியா?...உனக்குக் கூடவா என்னைப் பிடிக்கவில்லை? என் வீட்டு சோற்றை எவ்வளவு நாள் தின்றாய்; திடீரென்று புது சிநேகிதம் கிடைத்ததும் வந்து விட்டாயா?" என்று பூனையை இழுத்துத் தடவிக் கொடுத்தார் பீதாம்பரம்.

"உட்காரேன் மைனா—ஏன் நிற்கிறாய்?" என்று அன்போடு அவளை உட்காரச் சொன்னார். அவள் உட்காரவில்லை.

"காலங்காத்தாலே ரொம்ப தூரம் நடந்தது பசி தாங்க முடியவில்லை...ஏதாவது இருக்கிறதா? போடுகிறாயா?" என்று மிகச் சாதாரணமாகக் கேட்டார் அவர்.

மைனாவால், பீதாம்பரத்தின் போக்கைப் புரிந்து கொள்ளவே முடியவில்லை.

"சரி; உனக்கேன் சிரமம்—இருந்தால் நானே போட்டுச் சாப்பிடுகிறேன்!" எனக் கூறியவாறு பீதாம்பரம் அடுக்களையில் உள்ள பானையிலேயிருந்து பழைய சோற்றை எடுத்துத் தட்டிலே போட்டுக் கொண்டு மைனாவுக்கு எதிரே உட்கார்ந்து சாப்பிட ஆரம்பித்தார். அவரோடு, அதே தட்டில் பூனையும் சாப்பிடத் தொடங்கியது.

மைனாவுக்கு நிற்க முடியவில்லை. உடலெங்கும் நடுங்கியது. ஆயினும் வலுவில் மன உறுதியை வரவழைத்துக் கொண்டு சமாளித்துக் கொள்ள முயன்றாள்.

"உப்பு இருக்கிறதா?" என்றார், பீதாம்பரம்!

உப்புக் கிண்ணத்தை மைனாவே எடுத்து அவருக்கு அருகில் வைத்தாள். "கொஞ்சம போடு உன் கையாலேயே; அளவாக!" என்று பீதாம்பரம் கோரிக்கைவிடவே, அவளும் பழைய சோற்றில் உப்பைப் போடத் தொடங்கி, கிண்ணத்தையே கைதவறிக் கவிழ்த்து விட்டாள். பீதாம்பரம் அது கண்டு, "கல கல" வென நகைத்தார்.

தொடரும்

இராமநாதபுரம் மாவட்ட

தி. மு. க. 3-வது மாநாடு

பிப்ரவரி 22, 23 (சனி, ஞாயிறு) நாட்களில்

தேவகோட்டை --- வள்ளுவர் திடலில்

மஜீது அரங்கில் நடைபெறும்.

★

தலைவர் :

க. அன்பழகன் எம். ஏ., எம். எல். ஏ.

திறப்பாளர் :

இலட்சிய நடிகர்

எஸ். எஸ். இராசேந்திரன்

அறிஞர் அண்ணா,

நாவலர் நெடுஞ்செழியன்

மற்றும் முன்னணித் தோழர்கள் கலந்து கொள்வர்.

முதல் நாள் :	இரண்டாம் நாள் :
22-2-58 சனி இரவு	23-2-58 ஞாயிறு இரவு
தோழர் மு. கருணாநிதி நடிப்பதும், புதுமை நாடக மன்றத்தார் அளிப்பதுமான 'உதய சூரியன்' நாடகம்	தோழர் நாகூர் அனிபா குழுவினருடன் இசைவிருந்து

இரு நாட்களுக்கும் நுழைவுக் கட்டணம் :
ரூ. 5, 3, 2. பெண்களுக்கு அணா 8.

இ. ல. ம. சவுந்தரபாண்டியன்,
வ. கு தலைவர்

இராம, வெள்ளையன்,
மா. குருசாமி
செயலாளர்கள்

நவமார்க்கண்டேயன்—பொருளாளர்

விடுதலைத் தானையின் தலைவன்!

ஹோ—சி—மின்! காவிலத்தின் நாற்றிசையிலும் இந்த அற்புதப் பெயர் இன்று ஒலிக்காத இடமே இல்லை எனலாம். அறிவுக் கருவூலம்—அரசியல் திருவிளக்கு—புரட்சியின் பெட்டகம்—வியட்னாம் விடுதலைக் காவியத்தின் கதாநாயகன்—என்றெல்லாம் பாராட்டிப் போற்றுகிறார்கள் உலகத்தின் விடுதலை வீரர்கள்! ஆம்; அன்னிய ஏகாதிபத்தியத்தின் இரும்புப் பாதங்களால் அழுத்தப்பட்டு, கண்ணீரையும், செந்நீரையும் சிந்திச் சீரழிந்த வியட்னாமின் சொந்த மக்களுக்கு வாழ்வளித்த வித்தகரல்லவா? அந்த விடுதலை வீரக் காவியத்தைத் தீட்டிய தீரனை—பிரஞ்சு ஏகாதிபத்தியச் சிங்கத்தின் பிடரி மயிரை உலுக்கி அதைத் துரத்தியடித்த வீரனை—வாழ்த்துவதில் வியப்பொன்றுமில்லைதான்!

ஹோ-சி-மின் என்று அன்போடும் ஆசையோடும், பாசத்தோடும் நேசத்தோடும், பெருமையோடும் பூரிப்போடும் அழைக்கப்படுகின்ற இந்தப் பேரறிஞர் இருபத்தைந்தாண்டுகளுக்கு முன்னால் இத்தகைய சொல்லாரங்கள்—புகழ்மாலைகள் தன்னைத் தேடிவரும் என எதிர் பார்த்திருக்கமாட்டார். பிறந்த பொன்னாட்டின் முதல் ஜனாதிபதியாய் அமரும் பாக்கியம் தனக்குக் கிட்டும் என்று கனவுகூட கண்டிருக்கமாட்டார். அப்பொழுது அவர் ஹோ-சி-மின் என்று கூட அழைக்கப்படவில்லை. 'கன்-ஆ-கோ' என்றுதான் அழைக்கப்பட்டார்.

இருபத்தைந்தாண்டுகளுக்கு முன்னால் அவர் பொது வாழ்க்கையில் காலெடுத்து வைத்தபோது யாரும் நினைத்துக்கூட இருக்கமாட்டார்கள், இந்த இளைஞர் விடுதலைச் சேனையின் தானைத் தலைவராகி, வெற்றி முரசு கொட்டி, நாட்டின் நாயகனாக அரசு கட்டிலில் கொலுவீற்றிருப்பாரென்று!

சாந்தம் தவழும் முகமும், சிந்தனையில் ஆழ்ந்த கண்களும் படைத்த அந்த எளியவரின் உள்ளத்திலே எப்படிப் புரட்சி எண்ணங்கள் பூத்துக் குலுங்கின என்று அவர் உருவத்தைக் கண்டோர் வியப்புறுகின்றனர். ஆசியா கண்டத்தின் புரட்சிவாதிகளிலேயே இவர்தான் முதன்மையானவர் என்று அரசியல் அறிஞர்கள் அறிவித்திருக்கின்றனர்.

அவர் வாழ்வே விசித்திரமானது; சுவையானது; இளமையில் தனது நாட்டின் செய்திகளை உலகெங்கும் எடுத்துச் செல்லும் பணியில் ஈடுபட்ட காரணத்தால் பல நாடுகளை—பிரெஞ்சு, பிரிட்டன், ஐக்கிய அமெரிக்கா, சோவியத் ருஷியா—போன்ற நாடுகளை எல்லாம் காணும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. அவர் செய்யாத தொழிலே இல்லை எனலாம். கடல் அலைகளின் மேல் செல்லும் நாவாயின் மாலுமியாக—உடல் முழுதும் நோகப் பாடுபடும் பாட்டாளியாக—உலகச் செய்திகளை சேகரிக்கும் பத்திரிக்கை நிருபராக—சிந்தனையைக் கிளறும் சிறந்த கட்டுரை தீட்டும் எழுத்தாளனாக—கொரில்லாப் படையின் போர்வீரனாக—பல துறைகளிலும் உழைத்த அந்த உத்தமன் இறுதியில் விடுதலை பெற்ற வியட்னாமின் முதல் ஜனாதிபதியாகவும் பணியாற்றி வருகிறார்!

ஹோவின் வாழ்க்கையே வியட்னாமின் விடுதலைப்போரின் சரித்திரமாகும்!

அவர் வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டமும், வியட்னாமின் விடுதலைபுரிப் பயணத்தின் படிக்கட்டுகளாக அமைந்திருக்கின்றன. இருபத்தைந்தாண்டுகளாக தாயக விடுதலைப்போரில் பணி புரிந்ததும், பெற்ற சுதந்திரத்தைக் காப்பாற்ற பதின்மூன்றாண்டுகள் தற்காப்புப் போரில் ஈடுபட்டதும், சோகமும் துக்கமும் நிறைந்த கண்ணீரால் தீட்டப்பட்ட தியாக சரித்திரமாகும்.

இளமைப் பருவத்தில் பெரும் பகுதியை ஹோ வெளி நாடுகளிலேதான் கழிக்க நேரிட்டது. அந்த நாளில் அன்னியரின் இரும்புப் பிடியில் சிக்கிச் சீரழிந்த வியட்னாமின் செய்தியை உலக மக்களுக்குசொல்ல இருந்த ஒரே சாதனம், ஊர் ஊராகச் சென்று உரையாற்றுவதுதான்.

தாயக விடுதலைப் போரில் ஈடுபட்டிருந்த தேசாபிமானிகளுக்கு அந்தக் காலத்தில் சாதாரண குற்றங்களுக்குக்கூட பெரிய தண்டனைகள் வழங்கப்பட்டு வந்தன.

1921-ம் ஆண்டு, ஹோ-சி-மின் பிரெஞ்சு ஆட்சியின் கீழிருந்த நாட்டின் தொழிலாளர்களின் இயக்கமான 'பிரெஞ்சு சோஷலிச இயக்கத்தில்' பங்கேற்றார்.

'பாரியா' என்ற பத்திரிக்கையை பாரிசில் துவக்கி, அதன் மூலம் பிரெஞ்சு நாட்டின் கீழுள்ள நாட்டு மக்களின் அவல வாழ்வை— கண்ணீர்க் காவியத்தை அவனிக்கு எடுத்துரைக்கலானார். அதுதான் அன்னிய ஆட்சியின்கீழ் அழுத்தப்பட்டு, அடிமைகளாய், ஊமைகளாய், புன்மைத் தேரைகளாய் வாடிய வாழ்விழந்த மக்களின் சார்பாக எழுப்பப்பட்ட முதல்முழக்கம்! எனினும் அவருக்கு அமைதியில்லை—தாயகத்திற்குத் திரும்பி தனது தோழர்களுடன் தோளோடு தோள் இணைந்து பணி புரிய அவர் உள்ளம் விரும்பியது.

1929—ம் ஆண்டு, வியட்னாமில் உள்ள பிரெஞ்சு அதிகாரிகள் ஹோ-சி-மின்னுக்கு மரண தண்டனை விதித்தார்கள். ஆனால் அதை நிறைவேற்ற அவர்களுக்குத் திராணி இல்லாமல் போய் விட்டது.

தேடித் தேடி அலைந்தார்கள் அந்த விடுதலை வீரனை! மக்களின் இதய பீடத்தில் அமர்ந்திருந்த அந்தத் தியாக சீலன் ஆளவந்தாரின் கண்களுக்குக் கிடைக்கவே இல்லை. அந்த பயங்கரக் கொடுந் தண்டனை மட்டும் நிறைவேற்றப்பட்டிருந்தால்—மலர்மாலையாலும், புகழாரத்தாலும் இன்று அலங்கரிக்கப்படுகின்ற ஹோவின் கழுத்தை முரட்டுக் கயிறு இறுக்கியிருக்குமேயானால்—உலகம் ஒரு தர்ம வீரனை, புரட்சியின் மொத்த உருவை, சிந்தனைச் சிற்பியை, அறிஞனை, எல்லாவற்றிற்கும் மேலாக தாயக விடுதலைக்குக் கிடைத்தத் தலைவனை இழந்திருக்கும்! வியட்னாமின் வாழ்வும் ஒளி இழந்து மங்கி இருக்கும்! பிரெஞ்சுப் பேரரசும் ஒரு பேரறிஞனைப் படுகளத்தில் கிடத்திய 'பாவ'த்திற்கு உலகத்தின் முன்னாலே தலைகவிழ்ந்திருக்கும்!

பிரெஞ்சு அரசாங்கத்தின் கண்களுக்கு மண்ணைத் தூவிய ஹோ ஆங்கிலேய அதிகாரிகளின் விழிகளை ஏமாற்ற முடியவில்லை. 1931-ம் ஆண்டு, ஹாங்காங்கில் ஆங்கிலேய அதிகாரிகள் ஹோவைக் கைது செய்தார்கள். ஆம்; இன்று ஆயிரம் ஆயிரம் மக்களின் நல்வாழ்விற்காக செங்கோல் ஏற்றிருக்கும் கரங்களிலேதான் ஆணவக்காரர்கள் விலங்கு மாட்டினார்கள். 'மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை நம்மை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை' எனப் பண் இசைத்து—கண்களில் களிப்பைத் தேக்கி— 'பிறந்த மண்ணிற்கு நான் செய்யும் கைம்மாறு மிக மிகக் குறைவு' எனக் கூறி காராக்கிரகத்திலே இரண்டாண்டுகள் கழித்தார்.

ஆங்கிலேய அரசாங்கம் இந்தச் செய்கையினால் சிறுமையைச் சேர்த்துக் கொண்டது. ஆனால் ஹோவின் பெருமை உயர்ந்தது.

மீண்டும் 1939-ம் ஆண்டு, ஹோ-சி-மின் தனது தாயகத்திற்குத் திரும்பி, விடுதலைப் பட்டாளத்தை ஒன்று சேர்க்கும் பணியில் ஈடுபடலானார். காராக்கிரகத்தில் தள்ளி விட்டால் விடுதலை உணர்ச்சி மங்கிவிடும் என எண்ணும் எத்தர்களுக்கு எச்சரிக்கையாக இருந்தது ஹோவின் விடுதலை நேசம்!

அவரது மேலான தலைமையின் கீழே எல்லா அரசியல் கட்சிகளும் ஒன்று திரண்டன, தாயக விடுதலைப் போருக்கு முரசு கொட்ட! இந்தோ—சீன பொதுவுடமைக் கட்சி—மற்றும் எல்லா அரசியல் கட்சிகளும் ஒன்று சேர்ந்து, 'வியட்—மின்' என்ற ஸ்தாபனத்தை ஹோவின் தலைமையில் நிறுவின. 'வியட்-மின்' என்றால் வியட்னாமின் விடுதலைப் போராட்டத்தின் கூட்டுறவு முன்னணி' என்று பொருள் படும். இந்தப் படைதான் வியட்னாமிற்கு விடுதலை வாங்கித் தந்து பெருமை அடைந்தது.

1945-ம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம், இப்படை வியட்னாமை 'சுதந்திர ஜனநாயகக் குடி அரசு' என்று பிரகடனப் படுத்தியது, ஹோவைத் தலைவராகக் கொண்டு. அன்றிருந்து 1945-ம ஆண்டு, ஜினிவா ஒப்பந்தத்தில கையெழுத்திடும் வரை, ஹோ—சி-மின்னுடைய கதை ஆசிய விடுதலைப் போராட்டத்திலேயே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படத் தகுதியானவைகளாகும். ஆனால், அடக்கி ஆண்டு பழக்கப்பட்ட பிரெஞ்சு ஏகாதிபத்தியம்—சரித்திரத்தின் உண்மை அறியா சர்வாதிக்கார கபோதிகள்—வியட்னாமின் சுதந்திரத்தை ஒத்துக்கொள்ளாமல், விடுதலைத் தாகம் கொண்டோரைத் தடிகொண்டு தாக்கத் திட்டத்தைத் தீட்டி, போர் முழக்கம்செய்தார்கள், இரக்கம் இல்லாமல்— இளகிய இதயம் இல்லாமல்! 'போர், போர்!' என எக்காளமிட்டது, பிரெஞ்சுப் பேரரசு!

சின்னஞ் சிறிய நாடு—ஆண்டாண்டு காலமாக அடிமைப்பட்டிருந்த நாடு—விடுதலைப் போராட்டத்தில் கணிசமான பணியை ஈந்த நாடு—பொருளாதாரம் சீர்குலைந்த நாடு—வசதி இல்லாத நாடு—போர்த் தளவாடங்கள் இல்லாத நாடு—பஞ்சம் பட்டினி மேவும் நாடு—மக்களின் விடுதலை தாகம் மட்டுமே பெற்றிருந்த நாடு—இந்த நாட்டின் மீதுதான் யுத்தத்தைத் துவங்கியது, இரத்தத்தை உறிஞ்சி உறிஞ்சிப் பழக்கப்பட்ட பிரெஞ்சு! ஆனால் விடுதலை ஆர்வம் கொழுந்து விட்டு எரிந்த மக்களின் சக்தியின் முன்னாலே துப்பாக்கியும், பீரங்கியும் தூள் தூளாக நொறுங்கியது. துப்பாக்கிக் குண்டு இதயத்தைப் பிளந்தாலும், 'எங்கள் நாடு எங்களுக்கே' என்று எக்காளமிடும் ஆயிரம் ஆயிரம் இளம் தொண்டர்களின் முன்னாலே பீரங்கியின் வேட்டுகள் வெத்துவேட்டுகளாயின. தாயக விடுதலையைத் தாரக மந்திரமாகக்கொண்டு—இதயத்திலே விடுதலைநாமத்தை உச்சரித்துக் கொண்டு—கரங்களையே கூரிய வாளாக, இரட்டைக் குழல் துப்பாக்கியாகக் கொண்டு—நிராயுதபாணிகளாகவே அவர்கள் போராடிப் பெற்ற வெற்றி—வீர வரலாறு போர் மனம் கொண்டோருக்கு ஒரு நல்ல பாடம்! ஆயுதத்தை மட்டுமே நம்பியிருக்கும் நாசகாரர்களுக்கு ஓர் எச்சரிக்கை! விடுதலை தாகத்தை அடக்கி

[தொடர்ச்சி பக்கம்—10]

ஆழாக்கு மண்...

[4—ம் பக்கத் தொடர்ச்சி]

யதை யெல்லாம் அவள் கேட்டிருப்பாள்.

பௌலோ அந்த நாற்றமடிக்கும் கந்தல் மூட்டையை அவிழ்த்து பணத்தைக் கீழே கொட்டினான். அவன் இடையிடையே சில்லறைகளை நோட்டாக மாற்றி அதில் வைப்பான்.

பணம் போட்டுக் கொண்டே இருந்ததை தவிர்த்து ஒருநாள் கூட எண்ணிப் பார்க்கவில்லை. ஆனால் இன்றுதான், அதற்கு அவசியம் நேர்ந்தது.

நோட்டுகளை அடுக்கடுக்காக அவன் எண்ணி வைத்தான். அழுக்கேறிய ஒரு ரூபாய் நோட்டுகள் குவியலாக இருந்தன.

நூறு......இரு நூறு......முன்னூறு.....நானூறு....நானூற்றி எண்பத்தைந்து ரூபாய்...!

நானூற்றி எண்பத்தைந்து ரூபாய்...ஐந்தாண்டு கூலி வேலையில் வயிற்றைக் கட்டி சேர்த்த பணம்! இன்னும் வேண்டும் பதினைந்து ரூபாய்...அதில்லாமல் இன்னும் துணி...பெட்டி...கல்யாணச் செலவுக்கு வேறு பணம் வேண்டும்!

மாலையில் ஈசியிடம் அவன் சொன்னான்: "அவர்கள் ஐநூறு ரூபாய் சீதனம் கேட்டார்கள், ஈசி!"

"அவ்வளவுதானா...?"

"உம்...என்னிடம் நானூற்றி எண்பத்தைந்து ரூபாய் இருக்கிறது. நானூறு ரூபாய்க்கு அவர்கள் ஒப்புக் கொண்டால் திருமணத்தை நடத்தி விடலாம். எண்பத்தைந்து ரூபாயில் பெட்டி — துணி—மற்ற செலவுகளைப் பார்த்துக்கொள்ளலாம். ஈசி, தயவு செய்து இதற்கு அவர்கள் சம்மதிக்க வேண்டுமே......"

"அதற்கென்ன; நான் நாளைக்குப் போய் அவர்களிடம் சொல்லுகிறேன்...அவர்கள் நல்லவர்கள். ஒத்துக்கொள்வார்கள்..."

மறுநாள் ஈசி வந்தான். "நானூறு ரூபாய் போதும் என்று நான் சொன்னதும் அவர்கள் ஒப்புக்கொண்டனர். பெண்ணையும் பெண்ணின் நல்ல குணங்களையும் பிடித்துவிட்டதனால்தான் இந்தத் திருமணம் நடக்கிறது..."

பௌலோ அன்றுதான் வாழ்விலேயே முதன் முதலாக மகிழ்ச்சிக் கடலில் நீந்தினான்.

மகளுடைய மணம்...நினைத்ததற்கு விரைவாகவே நடக்கிறது.

அன்று முதல் பௌலோ ஒரு புது மனிதனாகவே மாறிவிட்டான். சாலை வேலைகளில் இதற்கு முன்பில்லாத சுறுசுறுப்பு இப்போது அவனுக்கு இருந்தது.

மற்ற சகத் தொழிலாளிகளிடம் அவன் சொன்னான்:

"அடுத்த ஞாயிறு என் மகளுடைய திருமணத்தின் 'மண சம்மத நாள்'..."

"ஆமாம்...பெண்ணைக் கட்டிக் கொடுத்து விட்டால் உன் கதி...?"

"என்னைப் பற்றி விட்டுத் தள்ளு அப்பேன்! என் மகள் நல்லா இருந்தால் அதுவே எனக்குப் போதும்..."

●

காரியங்கள் வேகமாக நடக்க ஆரம்பித்தன...வீடு புதிய ஓலைகளால் பௌலோவின் இதயம் போல மின்னியது. கல்யாணத்திற்கு உறவினர்களையும், ஊர்க்காரர்களையும், கூட வேலை செய்தவர்களையும் அழைக்கவேண்டும்......

சகத்தொழிலாளர்களிடையே இன்று பௌலோவுக்கு அதிகமான மதிப்பு. அந்தத் திருமணம் அவர்களிடையே ஒரு மகா சம்பவமாக மாறியது...தங்கள் வீட்டில் திருமணம் நடப்பதாகவே அனைவரும் எண்ணிக் கொண்டனர்.

சாராம்மா இன்பத்தில் திளைத்தாள். ஆனால் ஒன்றை நினைக்கும்போது அவள் நெஞ்சம் உருகியது. அவள் கணவன் வீட்டிற்குப் போய்விட்டால் தந்தையைக் கவனித்துக்கொள்வது யார்; கஞ்சி வைத்துக் கொடுப்பது யார்; அதுவும் இந்தத் தள்ளாத வயதில்? அவளுடைய கண்கள் கண்ணீரால் நிரம்பின.

ஆனால் இதைப்பற்றியெல்லாம் பௌலோவுக்குக் கவலை இல்லை. திருமணத்திற்கான வேலைகளில் அவன் ஓடிக்கொண்டிருந்தான். ஐம்பது ஆண்டைத் தள்ளி விட்ட அக்கிழவனிடம் சுறுசுறுப்பும் இளமையும் நிழலாடியது.

அப்பொழுது அந்த ஊர்க் கோவிலில் திருவிழா நடைபெற்றது. திருவிழாவுக்குப் போன பௌலோ திரும்பி வரும்போது ஒரு பெட்டியைத் தூக்கிக் கொண்டு வந்தான்...அதனுள் துணிகள் இருந்தன, பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும்...

மண சம்மத நாள் வந்தது. உறவினர்கள் சிலர் வந்திருந்தனர். அன்று கோவிலுக்குப் போகும்போது சாரா புது உடைகள் அணிந்திருந்தாள். புத்தாடை சல சலக்க தந்தை முன் வந்தாள் சாரா...இருவருடைய கண்களும் நிரம்பி வழிந்தது.

பௌலோ கண்களைத் துடைத்துக் கொண்டு சிரிக்க முயன்றான்...

●

திருமண நாள் நிச்சயித்தாகிவிட்டது. திருமணத்திற்கு இன்னும் நான்கு நாட்களே இருக்கின்றன. எல்லோரையும் கல்யாணத்திற்கு அழைத்தாகிவிட்டது.

வழக்கம்போல அன்றும் அவன் வேலைக்குப் போகத் தயாரானான்.

"மகளே! நாளை முதல் நான் விடுமுறை வாங்கிக் கொள்கிறேன்..."

"நாளை முதலா...?"

"ஆமாம்......எவ்வளவோ வேலை இருக்கிறது. முதலில் சுவருக்கு சுண்ணாம்பு அடிக்க வேண்டும். அந்த வேலியை சரியாகக் கட்ட வேண்டும். பிறகு 'அது இது' என்று எவ்வளவோ வேலைகள்.....பகலுக்கு ஏதாவது செய்து நல்லா சாப்பிடு......நான் வரட்டுமா?"

பௌலோ வழக்கத்திற்கு மாறாக அன்று சீக்கிரம் வேலைக்குப் போய் விட்டான்.

தெரு முனையைத் தாண்டு மட்டும், வாசலில் நின்று கொண்டிருந்த தன் மகளைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே சென்றான்.

பகலுணவுக்குப் பிறகு தண்ணீர் ஊற்றிய சாலையின் நடுவே 'ரோலரை' இழுத்துக்கொண்டு வந்து நிறுத்தினார்கள். அதன் அச்சில் சேர்த்து நீண்டிருக்கும் இரும்பு 'பாரில்' அனைவரும் பிடித்துக்கொண்டனர். அதே 'பாரு'க்கு உள்ளே ரோலருக்கு மிக அருகில் மண் வெட்டியுடன் பௌலோ திரும்பி நின்று கொண்டிருந்தான், ரோலரில் பிடிக்கும் மண்ணை வழித்தெடுக்க.

"ஏ...லோ..."

"ஏ...லே...லோ"

நாற்பது கைகள் ஒன்றாக இழுத்தன. உருட்டுக்கல் உருண்டது. பௌலோ உரக்கப் பாடினான். அவர்களுக்கெல்லாம் உற்சாகம் கரை புரண்டோடியது...அந்தப் பாட்டு உயர்ந்து கொண்டே இருந்தது.

இருபது பேரும் தாளத்திற்கேற்ப இழுக்கின்றனர். 'உருட்டுக் கல்' வழக்கத்திலும் வேகமாக உருண்டது. பௌலோ மண்ணை வேகமாகச் சுரண்டிக் கொண்டே பின் பக்கமாகவே நடந்து கொண்டிருந்தான். ரோலர் முடிவை நெருங்கி விட்டது.

திடீரென்று பௌலோவின் மண்வெட்டி இடறியது அவன் மல்லாந்து கீழே வழுந்தான். அந்தக் கிழவனுடைய எலும்புக்கூடு தெரியும் மார்பின்மேல் அந்த 'உருட்டுக்கல்' ஏறியது.

மறுகணம்...

இரத்தம் நான்கு பக்கங்களிலும் சிதறியது...ஒரு துடிப்பு...ஒரு வலிப்பு...எல்லாம் முடிந்துவிட்டது!

கொஞ்ச தூரத்தில் தெறித்து விழுந்திருந்த மண் வெட்டியில் பௌலோ, ரோலரின் மேலிருந்து சுரண்டி எடுத்த 'ஆழாக்கு மண்' அப்பொழுதும் ஒட்டிக் கொண்டிருந்தது. ●

சேலம் மாவட்ட

தி. மு. க. 3-வது மாநாடு

1958, பிப்ரவரி 15, 16 சனி ஞாயிறு நாட்களில்

வேலூர் (சேலம்) 'அழகிரி' பந்தலில் நடைபெறும்.

தலைவர்:
மு. கருணாநிதி

திறப்பாளர்:
நடிப்பிசைப் புலவர்
கே. ஆர். இராமசாமி

அறிஞர் **அண்ணா**, நாவலர் **நெடுஞ்செழியன்**
மற்றும் கழக முன்னணி சொற்பொழிவாளர்கள் கலந்துகொள்வர்.

இரு நாட்களுக்கும் நுழைவுக் கட்டணம்:—
ஆண்களுக்கு ரூ. 5, 3, 2. பெண்களுக்கு ரூ. 1.

பி. எம். குப்புசாமி, பொருளாளர்
ப. இராமலிங்கம், செயலாளர்
ஜி. பி. சோமசுந்தரம், வ. கு. தலைவர்
இரா. தாண்டவன், —தொண்டர் படைத் தலைவர்

விடுதலைத் தானையின்…

[8—ம் பக்கத் தொடர்ச்சி]

விடலாம் என்று மனப்பால் குடிப்போருக்கு ஒரு விளக்கம்! தாயக விடுதலைப் பட்டாளத்தில் அணிவகுத்து நிற்கும் நற்தொண்டர்களுக்கு ஒரு வழிகாட்டி!

1954-ம் ஆண்டு ஹோவின் வீர முழக்கத்தை முதலாகக் கொண்டு, அவர் சுட்டிக் காட்டிய இடத்திலே ஈட்டியெனப் பாய்ந்து — சுதந்திரத்தைப் பறிக்க வந்தவரை வெட்டி வீழ்த்தி பூர்ண வெற்றியும் பெற்றனர் வியட்னாமின் மக்கள்! டைன்பின்பூவில் பெற்ற வெற்றி பிரெஞ்சு ஏகாதிபத்தியத்திற்கு சமாதி கட்டியது.

போர்க் காலத்திலும், சமாதானக் காலத்திலும் ஹோ மக்களின் ஒளி விளக்காக—நல்லதோர் உலகிற்கு அழைத்துச் செல்லும் தலைவனாக—இருக்கிறார். அந்நாட்டின் தலைவர்களிலேயே இவர்தான் உயர்ந்தவர், எண்ணத்திலும், உருவத்திலும்!

அவர் மொழிவழி நடக்க—வழிகாட்டும் திசையில் போக-அந்நாட்டு மக்கள் காத்து நிற்கின்றார்கள். அவர் சுட்டுவிரல் அசைந்தால் போதும்; எட்டு திக்கும் சென்று வெற்றி முரசு கொட்டத் தயாராக இருக்கின்றனா! அத்தகைய செல்வாக்கும், மக்களின் இதயத்தில் நீங்காத அன்பும் கொண்டவர் ஹோ!

அவருடைய நடை உடை பாவனைகள், எளிய வாழ்க்கை, கடுமையான உழைப்பு, சிறிய விஷயத்தையும் கூர்ந்து கவனிக்கும் பண்பு ஆகியவைகளைப் பற்றி கதைகதையாக அந்நாட்டில் கூறப்படுகிறது. அவைகள் அந்நாட்டின் 'கொன்முதல்' என்றுகூடக் கூறலாமாம்.

'எளிய வாழ்க்கை, உயர்ந்த சிந்தனை' என்ற நல்மொழிக்கு இலக்கியமாக—எடுத்துக் காட்டாக இருக்கிறார் ஹோ.

குறித்த காலத்தில், குறித்த வேலையைச் செய்வதில் அவர் மிகவும் கைதேர்ந்தவர். அதில் அவர் தவறுவதே இல்லை. அவர் செய்யும் பணிகளைக்கொண்டு கடிகாரத்தில் மணியைச் சரி செய்துகொள்ளும் அளவிற்கு அவர் இந்தக் கொள்கையைக் கடைப்பிடிப்பவர்.

"இந்த ஒழுக்கத்தை நீங்கள் எப்படி இவ்வளவு கடுமையாக செயல்படுத்துகிறீர்கள்?" என்று ஒரு முறை ஓர் இளைஞர் அவரைக் கேட்டாராம்.

அதற்கு அவர், "அது பழக்கத்தால் ஏற்படுகிறது. என் இளமைப் பருவத்தில் நான் கப்பலில் பணியாற்றிவந்தேன். கப்பலிலே இடம் குறுகியதாக இருப்பதால் பொருள்கள் குவிந்திருப்பதால், மிகக் குறுகிய இடத்திலேயே நடமாடவும் படுக்கவும் முடியும். ஆகவே, அந்தந்த பொருள்கள் இருக்க வேண்டிய இடத்தில் இல்லாவிட்டால் காரியங்கள் ஏதும் நடைபெறாது. ஆகவே அப்பொருள்கள் இடம் பிறழாமல் இருக்க நான் மிகவும் பிரயத்தனம் செய்வேன். அதற்கு நான் மிகவும் கடுமையாக உழைக்கவேண்டியிருந்தது. பிரெஞ்சு நாட்டில் நான் வாழ்ந்தபோது பகலெல்லாம் பாடுபட்டுப் பணம் சம்பாதிப்பேன், என் வயிற்றைக் கழுவிக் கொள்ள! இரவெல்லாம் படிப்பேன், என் அறிவைப் பெருக்கிக்கொள்ள! ஆகவே நான் இரவும் பகலும் அயராது உழைக்கவேண்டியிருந்தது. காலப்போக்கில் அது எனக்குப் பழக்கமாகிவிட்டது!"—என்று அமைதியாகக் கூறினாராம்!

இவ்வளவு வயதான பின்னரும்கூட இதே பழக்கத்தைக் கடைப்பிடிக்கிறார் அவர்.

இத்தகைய சீரும், சிறப்பும் பெற்ற ஹோ—சி—மின் தற்போது இந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்கிறார். ஆகவே அவரது வாழ்க்கையின் வீர வரலாறு தாயக விடுதலைப் போரில் பணியாற்றும் நமக்கெல்லாம் கலங்கரை விளக்கமாகும்! அவருடைய சிந்தனையும், செயலும் நமக்கு வழிகாட்டிகளாகும்!

—முல்லை சித்ரா

நூலேணி

பிரம்மச்சாரி

எழுதியவர்: எஸ். ஏ. பி.

நகைச்சுவை சொட்டும் நல்ல கதைகள் எழுதும் தமிழ் நாட்டு எழுத்தாளர் வரிசையில் முன்னணியில் இடம்பெறும் தோழர் எஸ். ஏ. பி. அவர்கள் இந்நூலின் ஆசிரியர்.

'பிரம்மச்சாரி' என்று தலைப்பு பெற்றிருந்தாலும் இந்தக் கதை எல்லோரும் படித்துச் சுவைக்கத் தக்க விதத்திலே சொல்லப்பட்டிருக்கிறது.

பேச்சு நடையில்; மிக அழகிய உவமைகளையும் சம்பவங்களையும் கதைப் போக்கிற்கு ஊறு நேரா வண்ணம் எடுத்தியம்பும் ஆசிரியர் பாணி போற்றுதற்குரியது.

விலை ரூ. 3—00

வைரப் பூ

எழுதியவர்: ஹேமா ஜனார்த்தனன்

எழுத்தாளர்களுக்கு இந்த உலகத்தில் எத்தனையோ சம்பவங்களும் பாத்திரங்களும் பொருள்களாகக் கிடைக்கின்றன. சிலர் இந்த உலகம் சம்பந்தப்படாதவற்றையும் கருப்பொருளாக உபயோகிப்பதுண்டு.

ஒரு சாரார் ஒரு குடும்பத்துக்குள்ளேயே கதையைச் சுழல விடுவார்கள். வங்க ஆசிரியர்கள் இதில் கை தேர்ந்தவர்கள்.

—அப்படிப்பட்ட பிரிவைச் சேர்ந்ததுதான் இந்த நூலும். தாய்மார்களுக்கு இது மிகவும் பிடிக்கும்.

விலை ரூபாய் 1—00

மேற்கண்ட இரு புத்தகங்களும் கிடைக்குமிடம்:

மங்கள நூலகம், சென்னை-6

தமிழன் எங்கே?

எழுதியவர்: மு. கணபதிப் பிள்ளை

ஆமாம்; 'தமிழன் எங்கே?' என்று ஒவ்வொருவரும் கேள்வி கேட்டுக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில்தான் இந்தப் புத்தகம் வந்திருக்கிறது.

பூனையைப் போல் பயந்தோடுபவனல்ல தமிழன்; புலியைப் போல் பாய்ந்து போர் புரிபவன் அவன்—என்கிற பின்னணியில் பன்மொழியாராச்சியின் பயனாக ஆசிரியர் கண்டவற்றை அழகுற எடுத்துச் சொல்கிறது, இந்த நூல்.

மாணவர்களுக்கு இந்நூல் பெரிதும் துணைபுரியும்.

விலை ரூ. 1—25

கிடைக்குமிடம்:

மு. திருநாவுக்கரசு, "செவ்வேளகம்"
தென்புலோலியூர், பருத்தித்துறை (இலங்கை)

இசைப் போட்டி…

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

தன்மை வெளியாகியது. சூலாயுதம் வேலாயுதம தாங்கி - கத்தி துப்பாக்கி முனையிலே ஆட்சி புரிந்தோரெல்லாம், தி. மு. க. எடுத்துக் காட்டிய ஜாரரசன்போல் வீழ்ந்தனர்.

எனவே நாட்டிற்காகவும், நாட்டு நலத்திற்காகவும், நாட்டு விடுதலைக்காகவும் பாடுபடும் தி மு. க. தொண்டரே இந்த இசைப் போட்டியில் வெற்றி பெற்றாரென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்!

தி. மு. க. தொண்டர்:

வெற்றி கூறுமின்! வெண்சங் கூதுமின்! எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ்மொழி என்றென்றும் வாழியவே!…

—"இன்பபுரியான்"

பிறைவானம்…

[11—ம் பக்கத் தொடர்ச்சி]

தாழ்த்தி—சின்னப் மறைத்துப் பேசியது. அதைக் கேட்டதும் மானுக்குக் கொஞ்சம் பயம் போயிற்று. நரியுடன் புறப்பட்டது.

●

சுரத்தில் சிக்கியபிறகும் சிங்கராசனின் முகத்தில் எப்படித்தான் அவ்வளவு கோபம் வந்ததோ தெரியவில்லை; விழிகள் மட்டுமல்ல; முகமும்கூட சிகப்பாக மாறிவிட்டிருந்தது.

எதிரிலே நடுநடுங்கிக் கொண்டு மான் நின்றது. நரியோ முகத்தில் தோன்றிக் கொண்டிருந்த சிரிப்பை அடக்க முடியாமல் அடக்கிக் கொண்டிருந்தது. கொஞ்சமும் பயமின்றி மானை வெற்றிக் களிப்போடு நோக்கியஅதன் பார்வை 'பழிவாங்கிவிட்டேன் பார்!' என்றுதான் உணர்த்தியது.

"சீ, மானங்கெட்ட மான் குட்டியே! இத்தனை திமிர் உனக்கு எத்தனை நாளாய்? மரணப் படுக்கையிலே கிடக்கிறேன் நான்-மரியாதை இல்லை உனக்கு—திரும்பியும் பார்க்கவில்லையே இந்தத் திசையில்! என்ன ஆணவம் உனக்கு!…"

சிங்கராசன் இப்படிச் சீறினார். மானுக்கு விபரமனைத்தும் புரிந்துவிட்டது. புறங் கூறிப் பிழைப்பு நடத்தும் வஞ்சக நரி விரித்த வலையிலே விழுந்துவிட்டார் அரசர் என்பதை அது சுலபத்தில் தெரிந்துகொண்டது. முள்ளை முள்ளால்தான் எடுக்க வேண்டும் என்றும் உறுதிகொண்டது.

"அரசே! நான் வரவில்லை என்பது உண்மைதான். ஆனால் என்ன செய்தேன் என்று உங்களுக்குத் தெரிவிக்காதது என் தவறுதான். உங்கள் உடல் நிலை கெட்டது என்றதும் பதறினேன்; ஆனால் மற்றவர்களைப் போல் பக்கத்திலேயே நிற்பதில் பலனில்லை; கண்ணீர் விடுவதில் பலனில்லை……"

"என்ன சொன்னாய்?…"

"ஆமாம்; அதனால் எல்லாம் உங்கள் உடல் நிலை சரியாகிவிடுமா? பிணியைத் தீர்க்க மருந்தென்ன என்று தேடி ஓடினேன்!…"

"சபாஷ்……அப்புறம்? என் உடல் நிலை சரியாக மருந்து கண்டாயா?…" — சிங்க ராசனின் கோபம் கொஞ்சம் குறைந்திருந்தது.

"எங்கெங்கோ அலைந்தேன் பிரபு…உலகத்திலுள்ள எல்லா மருத்துவர்களையும் சந்தித்தேன்…"

"என்ன சொன்னார்கள்?…"

"நீங்கள் விஷ சுரத்திலிருந்து தப்பிக்க ஒரே ஒரு மருந்து…"

"என்ன மருந்து அது?…"

"நரியின் கறியை மட்டுமே விடாமல் புசிக்கவேண்டுமாம்!… 'விர்'ரென்று வியாதி குறையுமாம்! புது பலம் உண்டாகுமாம்!…"

மறு கணமே சிங்க ராசன் நரியின் பக்கம் திரும்பினார். நரி நழுவ ஆரம்பித்தது. ஆனால் குகையின் வாசலை அடைத்துக் கொண்டு நின்றது மான்!

பிறகு என்ன நடந்திருக்குமென்று நினைக்கிறீர்கள்? சிங்க ராசாவுக்கு நோய் தீருமோ தீராதோ தெரியாது; பின் விளைவு அறியாது புறங்கூறிய பொல்லாத நரிக்கு சரியான தண்டனை கிடைத்து விட்டது!

—சொர்ணம்

★ புறங் கூறாதே! ★

★ குறள் விளக்கக் கதை ★

"நமக்குப் பிடிக்காதவனை நாம் எப்படி நடத்த வேண்டும்?..."

அப்படியே அவன் நமக்குக் காலமெல்லாம் கெடுதல் செய்பவனாகத்தான் இருக்கட்டுமே; அவனுக்குக் கனவிலும் துரோகம் நினைக்கக் கூடாது—என்பார்கள் அறிஞர்கள்.

அதை விடுத்துப் பழிவாங்கவோ—பொல்லாது செய்யவோ—புறங்கூறவோ கூடாது!

ஒருவன் எதிரே இருந்தாலும் பரவாயில்லை; இல்லாதபோது அவனைப்பற்றி அடாது சொல்பவர்—அழித்துவிடத் துணிந்துவிடுபவர்—பின் விளைவை உணராதவர்—தன்னைத்தானே அழித்துக் கொள்பவர். அதைத்தான் வள்ளுவர்,

கண்நின்று கண்ணறச் சொல்லினும்—சொல்லற்க
முன்இன்று பின்நோக்காச் சொல்

—என்று சொன்னார். அந்தக் குறளுக்கு விளக்கம் தருகிறது இக்கதை.

காட்டிலே ஒரே குழப்பமாக இருந்தது. 'காடு' என்றால் நாட்டு மக்கள் எல்லோரும் ஒதுக்கிவைத்து விடுகிறார்களல்லவா; ஆனால் பொல்லாத 'ப்ளூ' காய்ச்சல் மட்டும் 'விட்டேனா பார்!' என்று காட்டுக்குள்ளும் நுழைந்து விட்டது.

அது 'ஹைடராஜன் குண்டி'லிருந்து பிறந்து—கடல் வழியே நீந்தி—உலக நாடுகளில் உல்லாசப் பிரயாணம் செய்து—உலக வியாதிகளின் ஏகத் தலைவனாகி விட்டது என்று சொல்லிக் கொண்டார்கள்.

இதெல்லாம் காட்டு மிருகங்களுக்குத் தெரியுமோ என்னவோ! ஆனால் விஷ சுரம் படையெடுத்து விட்டது, பகைவர்களும் புகமுடியாத நம் சாம்ராஜ்யத்துள் என்றதும் எங்கும் பீதி பரவி விட்டது! பறப்பன—பாய்வன—ஊர்வன—நீந்துவன—எல்லாமே பயத்தால் குன்றிப் போயின! 'என்று வருமோ அந்த 'எம வியாதி'; எமைப் பிடித்தாட்டுமோ—என்று நடுங்கின.

வியாதியில் சிக்கிய மிருகங்கள் எல்லாம் முதலில் அச்சமுற்றன. இறந்து விடுவோமோ என்று துடித்தன. ஆனால் அவை நினைத்ததுபோல் எதுவும் நடக்கவில்லை. கொஞ்சம் உடல் பலவீனமானது; அதைத் தவிர வேறு விபரீதம் எதுவும் நேரவில்லை. 'பூ, இவ்வளவுதானா?' என்று சில மிருகங்கள் பேச ஆரம்பித்து விட்டன.

ஆனால், அந்தப் பொல்லாத வியாதி காட்டரசனையும் பிடித்துக் கொண்டது என்றதும் தான் காடே மறுபடியும பயங்கர பயத்திற்கு ஆளாகியது. அரசனுயிரற்றே; சாதாரண தலைவலி, பலவலி என்றாலே பிரமாதப்படுத்தி விடுவார்களே—விஷசுரம் என்றால் கேட்கவா வேண்டும்?

சிங்கராசனின் குகையில் ஒரே அமைதி சூழ்ந்திருந்தது. அந்த இருட் குகையின் மத்தியில அழகாகப் போடப்பட்டிருந்தது ஒரு வைக்கோல் மெத்தை; அதிலே ஒரு பாறாங்கல் தலையணை; அதிலே தலையைச் சாய்த்தபடி படுத்துக் கொண்டிருந்தது, சிங்கம்! பக்கத்தில் சோகமே உருவாக உட்கார்ந்திருந்தது குள்ளநரி! அதற்கு அங்கென்ன வேலை? சிங்கத்திற்கும் 'ப்ளூ' வந்து விடும் என்ற பயம் தோன்றிய கணம் முதல் குள்ளநரி அங்கேயேதான் இருக்கிறது. பொல்லாத சந்தர்ப்ப வாதியல்லவா; 'நரி மட்டுமே ராசனிடத்தில் அன்பு கொண்டவன்; இரவு பகல் கண்விழித்துக் கவனிக்கிறான்' என்ற நல்ல பெயர் வேண்டும்; அதை வைத்துக் கொண்டு ஏதேனும் காரியம் சாதித்துக் கொள்ளவேண்டும்— இதுதான் அந்த வஞ்சக நரியின் திட்டம்.

சிங்கம் "உம்..." என்றால் போதும்; நரி பதறி விடும்.

"ஐயோ..." என்றாலோ "மகாராஜா! ...... மகாராஜா!......" என்று கதறும்; அர்த்தமில்லாமல இங்கு மங்கும் ஓடும்; தடுமாறும; தத்தளிக்கும்! மொத்தத்தில் மற்ற காட்டு மிருகங்கள் எல்லாம குகையை நெருங்கவே பயப்படும்போது நரி மட்டும் சிங்கத்தின் இதயத்தில் நல்ல இடத்தைச் சம்பாதித்துக் கொண்டு விட்டது.

சிங்க ராசன் படுக்கையில் கிடக்கிறார் என்றதும் காட்டு மிருகங்கள் கூடிப் பேசின. ஒருக்கால் மன்னர் இறந்து விடவும் கூடும்; ஆகவே நாம் எல்லோரும் அவரைப் போய் பார்க்க வேண்டும்; உடல் நலம்பற்றி விசாரிக்க வேண்டும்—என்று முடிவு செய்தன. ஆகவே மிருகங்கள் அத்தனையும் ஒவ்வொன்றாக சிங்கத்தின் குகைக்குச் சென்று வர ஆரம்பித்தன.

சில கண்ணீர் விட்டன; சில அழுதன; சில ஆறுதல் கூறின—எல்லாம் சிங்கத்தின் முன்னால் தான். அவைகளுக்கெல்லாம் சிங்கம் ஒன்றும் பதில் சொல்லவில்லை. ஆனால் குள்ளநரிதான் குறுக்கே குறுக்கே இடைமறித்தது; சமாதானம் சொல்லியது. "பிரஜைகளாகிய நீங்கள் தைரியமாக இருங்கள். நமது மேன்மை தங்கிய பிரபுவுக்கு ஒன்றுமே இல்லை. இன்னும் நாலு நாளில் பவனி வரத் துவங்கி விடுவார்கள்!" என்று நீலிக்கண்ணீர் வடித்துக் கொண்டே சொன்னது!

காட்டு மிருகங்கள் எல்லாம் பார்த்து விட்டுச் சென்று விட்டன; ஆனால் மான் மட்டும் குகையை எட்டிக்கூடப் பார்க்கவில்லை.

மான், சிங்க ராசனை மதிக்கவில்லை என்று நினைத்து விடாதீர்கள். மான்தான் எப்போதும் பயந்த பிராணியாயிற்றே; காரணம் பயம்தான்! சிங்கத்தின் குகை மரண வாசல்போல் அதற்குத் தோன்றியது. பல முறை குகை வாசல்வரை சென்று, திரும்பி ஓடியிருக்கிறது!

மான் வரவேயில்லை என்றதும் நரி யோசித்தது. மானுக்கும் நரிக்கும் எப்போதுமே பகை! மேலும் மான் கறியைச் சுவைத்துப் பார்க்க வேண்டும் என்ற ஆசை நீண்ட நாட்களாக அதற்கு உண்டு. ஆகவே அதன் வஞ்சக மூளை பயங்கரமாக வேலை செய்தது. சிங்க ராசனிடம் பேச்சைத் துவங்கியது.

"மகாராஜா!...மகாராஜா!..."

"உம்...!" என்று மட்டும் சிங்கத்தின் குரல் எழும்பியது.

"விஷயம் உங்களுக்குத் தெரியுமா?...உங்கள் உடல் நலம் சரியில்லை என்றதும் உலகக் காடுகள் எல்லாம் நம் காட்டையே விழிப்புடன் பார்த்துக் கொண்டிருக்கின்றன..."

"அப்படியா?..."

"ஆமாம்! அதுமட்டுமா? உலகத் தினசரி ஏடுகள் எல்லாம் உங்கள் உடல் நிலையை மணிக்கு மணி அறிவித்துக் கொண்டிருக்கின்றன!..."

"ஓகோ!..."

"அது மட்டுமில்லை பிரபோ! சென்ற வாரம் கூட இருந்த ஐ. கா. சபை—அதாவது 'ஐக்கியக் காடுகள் மகாசபை' கூட ஒத்திவைக்கப்பட்டுவிட்டதாம். இப்போதுதான் பேப்பரில் பார்த்தேன். நமது பிரதிநிதி வி. கே. ஓநான் செய்தி நிருபர்களிடம் பேசியிருக்கிறார்..."

"என்ன?..."

"எங்கள் மகாராஜா செங்கோட்டைக் குகையில பயங்கரமான 'ப்ளூ' நோயால் படுத்த படுக்கையாகக் கிடக்கிறார். ஆகவே எப்போதும்போல் என்னால் தொடர்ந்து மணிக் கணக்கில் பேசமுடியாதாகையால், சபையை ஒத்திவைக்க வேண்டிக் கொண்டேன்—என்று பேசியிருக்கிறார். மேலும், நமது நிதிமந்திரி டி. டி. கிரிப்பிள்ளை அமேசான் (அமெரிக்கா) காடுகளில் கடன் வாங்கச் சென்றிருந்தார் அல்லவா..."

"ஆமாம்...!"

"அவர்கூட அந்தத் 'தொழிலை' விட்டு விட்டு தங்களைப் பார்க்க வருவதற்காக விமானமேறி விட்டாராம்...!"

"அடடா... என்மேல் அவருக்கு எவ்வளவு பாசம் பார்த்தாயா...?"

"ஆனால்...மகாராஜா..."

"என்ன நரித் தம்பி...'ஆனால்' போடுகிறாய்?..."

"நான் என்ன வென்று சொல்வது அனாதைரட்சகா..."

"ஏன் பயப்படுகிறாய்? தம்பி, சொல்லப்பா...!"

"இவர்கள் இத்தனை பேரும் தங்கள் உடல் நலம் சரியில்லை என்றதும் பதறித் துடிக்கிறார்களே—பறந்து வருகிறார்களே—நம் பக்கத்திலேயே இருக்கின்ற ஒரு பாவி மட்டும் இந்தப் பக்கம் பார்வையையே திருப்பவில்லை, கருணாமூர்த்தியே!..."

"ஆ!..." —கடுங் கோபத்துடன் படுக்கையை விட்டு 'குப்' பென்று எழுந்தது சிங்கராசன்.

"அமைதி மகாராஜா, அமைதி!..." —நரி பதறுவது போல் பாசாங்கு செய்தது.

"அமைதியா? எனக்கா? என் அன்புத் தம்பியே! யார் அந்த அயோக்கியன்? உடனே சொல்!..." —சிங்க ராசனுக்குப் பொல்லாத ஆத்திரம்!

"வேறுயாருமில்லை மகாராஜா! பக்கத்திலே இருக்கிறானே மானங்கெட்ட மான்—அவன்தான் ஐயா!" என்று சாவதானமாகச் சொன்னது குள்ளநரி.

"அப்படியா? அத்தனைத் திமிரா அந்தப் பொடியனுக்கு? சாகக் கிடக்கிறேன் நான்—என்னைவிட அவனுக்கு வேறு என்னதான் பெரிதாகிவிட்டது? கொண்டுவா அவனை; குடலைப் பிடுங்கி மாலையாகப் போட்டுவிடுகிறேன்?"—கர்ஜித்தது சிங்கம்.

நரிக்கு மனதிற்குள் மகிழ்ச்சி! அதை வெளிக்காட்டாமல் பேசாமல் நின்றது.

"ஏன் நிற்கிறாய் தம்பி? போ! இழுத்துவா, அந்த கர்வம் பிடித்தவனை!..." என்று சிங்கம் அலறியது.

அதன் கண்கள் இரத்தச் சிவப்பாயின. அதைக் கண்டு நரிக்குக்கூட பயம் உண்டாகிவிட்டது. இருந்தாலும் தான் வைத்த நெருப்பு பற்றத் துவங்கிவிட்டதே என்ற மகிழ்ச்சிதான்! மறுகணமே குகையை விட்டுப் பாய்ந்தது. அதற்குப் பிடிக்காத மானைத் தேடிக் கொண்டு ஓடியது.

●

சிங்க ராசன் அழைக்கிறார் என்றதும் மான் முதலில் அஞ்சியது. நடுங்கியது. ஆனால் நரியோ, "ஏன் பயப்படுகிறாய் தம்பி? சிங்க ராசன் இப்போது உன்னைக்கூட அல்ல; ஒரு முயல் குட்டியைக்கூடக் கொல்ல முடியாது. உடலிலே தெம்பே இல்லை. சுரக் கொடுமை ஆளை எலும்புக் கூடாக்கி விட்டது. எங்கே இறந்து விடுவோமோ என்று அவருக்குப் பயம்; ஆகவே எல்லோரையும் கடைசி முறையாகப் பார்த்து விட விரும்புகிறார். அதற்காகத்தான் உன்னையும் அழைத்துவர என்னை அனுப்பியிருக்கிறார். வந்துவிடு!..." என்று சிரம்

[தொடர்ச்சி பக்கம்—10]

சிறுத்தையின் புள்ளிகளை மாற்றினால் மட்டும் போதுமா?

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தனது அமைப்பு முறையை மாற்றிக் கொள்ளுவதாக அறிவித்திருக்கிறது!

—'சங்கர்ஸ் வீக்லி'

சொல்லிலே தேன் பாயுது; செயலிலே தேள் கொட்டுது!

"பலர் ஏழையாக, ஒரு சாரார் மட்டும் செல்வத்தைச் சேர்த்துக் கொண்டு போவதை ஒருக்காலும் அனுமதிக்க முடியாது!"

—என்று சூடு பறக்க; புரட்சி நடையிலே பாரதப் பிரதமர் பம்பாய் வர்த்தகக் கழகப் பொன்விழாவிலே பிரசங்கம் புரிந்திருக்கிறார்.

பண்டிதர் பலஜோலிக்காரர்; அவருக்கு எப்போதாவதுதான் தானும் ஒரு சோஷலிஸ்ட் என்கிற நினைவு வரும்.

உடன், அந்த நினைவு வந்த மாத்திரத்திலேயே தீப்பொறியாக மாறி; மகோன்னதக் கருத்துக்கள் ஊறும் சுனையாகிவிடுவார்!

ஒரு சாரார் செலவில் இன்னொரு சாரார் செல்வம் சேமித்துக் கொண்டு போவதை அனுமதிக்கமாட்டாராம்!

அய்யோ, பாவம்! இதுவரை நடந்து வந்திருப்பது என்ன?

ஒரு சாரார் ஏழைகளாக-ஏமாளிகளாக இருந்து வர இன்னொரு சாராரை எத்தர்களாக—குபேரர்களாக ஆக்க அனுமதித்து வந்தது யார்?

—வேறு யாருமல்ல; பண்டிதர் அரசாங்கமே இது போன்ற காரியங்களில் கண்ணை மூடிக் கொண்டு பேசாமலிருந்து ஊக்குவித்திருக்கிறது.

ஏழைகளாக காங்கிரசில் உறுப்பினராகி, அரசியல் வாழ்வை ஆரம்பித்த பலர் சாகும்போது குபேர சம்பத்துகளுக்குச் சொந்தக்காரர்களாகச் செத்திருக்கிறார்கள்!

உதாரணமாக; மத்தியப் பிரதேசத்தின் முதலமைச்சராக இருந்த ஒருவர் சிறந்த தேச பக்தரென்றும், காந்தி பக்தரென்றும் பெயரெடுத்தவர் சமீபத்திலே இறந்து போனார்!

இத்தனைக்கும் அவர் வகித்த உயர்ந்த பதவியே ஒரு மாநிலத்தின் பிரதமர் பதவிதான்!

பிரதம மந்திரியின் சம்பளம் தான் நமக்குத் தெரியுமே! அதைத் தவிர அவருக்கு நியாயமான சம்பாத்தியம் வேறு எதுவும் இருந்திருக்க முடியாது என்றுதான் எல்லோரும் கூறுகிறார்கள்!

ஆனால் நடந்தது என்ன தெரியுமா?

அந்த முதலமைச்சர் செத்த பிறகு அவரது சொத்துகளைக் கணக்கிட்டார்கள்!

சிலகாலம் பிரதம மந்திரியாக இருந்தவர் எவ்வளவு சம்பாதித்திருக்கலாம் என்று கருதுகிறீர்கள்?

ஆனால் உண்மை நிலைமையை ஆராயும்போது நமது சித்தம் கலங்கிவிடும்போல இருக்கிறது.

ஆமாம்; சாகும்போது அவருக்கிருந்த சொத்துக்களின் மதிப்பீடு சுமார் ஒரு கோடி ரூபாய்கள்!

—காங்கிரஸ் கட்சியின் அமைச்சர்கள் அனைவருமே இப்படித்தான் சம்பாதிக்கிறார்களோ—என்கிற நம்பிக்கையை பொதுமக்களிடையே எழுப்பிவிட்டது, இந்த பரபரப்பான செய்தி!

ஒரு சாரார் ஏழையாக; இன்னொரு சாரார் செல்வம் குவித்துக் கொண்டிருப்பதை அனுமதிக்க முடியாது என்று தமுக்கடிக்கும் பண்டித நேரு அந்த நேரம் இது பற்றி வாய் திறக்கவில்லை!

அன்று ஊமை வேஷம் போட்டார்; இன்று ஊரறிய முழங்குகிறார், நேர்மையற்ற வழியில் யாரும் குபேரர்களாவதை அனுமதிக்க மாட்டேனென்று!

இதே போலத்தான் வேறொரு நிகழ்ச்சியும் நடந்திருக்கிறது!

பலர் இந்த உப கண்டத்தில் ஏழைகளாக இருக்கிறார்கள்—என்பதைத் தெள்ளத் தெளிய ஒப்புக் கொள்கிறார், பண்டித நேரு!

ஏழைகள் நிரம்பிய நாடு இந்தியா!

அந்த 'ஏழை இந்தியர்களுக்காகப் பாடு பட்டவர் காந்தியார்!

அந்த காந்தியாருக்கு உரிய நினைவுச் சின்னம் எதுவாக இருக்க முடியும்?

அவரது கொள்கைகளைச் சரிய வழியில் கடைப பிடிப்பதுதான்!

ஆனால் இதுபோன்ற உன்னத நினைவுச் சின்னத்தை நிலை நாட்டத் துணிவற்றவர்கள் எழுபத்தைந்து லட்சம் ரூபாய் செலவில் டெல்லி ராஜகட்டத்தில் மண்டபமொன்றை நிர்மாணிக்கப் போகிறார்களாம்!

இந்திய உபகண்டத்திற்கு ஜனாதிபதியாக ஒருவர் வந்தால் அவர்கூட பிரமாண்டமான மாளிகையைத் துறந்து விட்டு; சாதாரண ஏழைப் பிரஜையைப்போல குடிசையிலே வாழ வேண்டுமென்று உபதேசித்தவருக்கு 75—லட்சம் ரூபாயில் நினைவு மண்டபம் நிறுவப் போகிறார்கள்!

ஆமாம்!

மந்திரியாக இருந்த ஒருவர் சம்பாதித்த தொகை 100 லட்சம்!

சன்யாசியாக இருந்து இறந்து போன ஒருவரது நினைவுக்காகச் செலவழிக்கப் போகும் தொகை 75 லட்சம்!

—இந்த நிலையில் ஒரு சாரார் ஏழையாக; இன்னொரு சாரார் பொருள் குவிப்பதை அனுமதிக்க மாட்டேனென்கிறார், பிரதமர். வெட்கம்! வெட்கம்!

● ● ●

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி. 'முரசொலி' அச்சகம், 4—128, மவுண்ட் ரோடு, தமிழ்நாடு, சென்னை-6